CSR
CENTRE FOR SOCIETY & RELIGION

EA
INFO

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் நிகழ்ந்து 50 மாதங்கள்

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான 11 வழக்குகளின் விசேட அம்சங்கள்

(2021 ஜனவரி 1 முதல் 2023 ஜூன் 21 வரை)

சமூகம் மற்றும் சமயத்துக்கான நிலையம் ஆய்வுக்குழு

**நிறைவேற்றுச் சுருக்கம்**

*2019* ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் *21* ஆம் திகதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல், இலங்கையில் போருக்குப் பின்னரான மிகப்பெரிய படுகொலையாகும். அத் தாக்குதலில் சுமார் *287* பேர் கொல்லப்பட்டதோடு சுமார் *600* பேர் காயமடைந்தனர். அது மூன்று கிறிஸ்தவ தேவாலயங்கள், மூன்று பெரிய ஹோட்டல்கள், ஒரு விருந்தினர் விடுதி மற்றும் ஒரு குடியிருப்பு ஆகியவற்றில் பாரிய அழிவை ஏற்படுத்தியது.

தாக்குதலில் உயிர் பிழைத்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களது குடும்பங்கள் தொடர்ந்தும் விளைவுகளால் பாதிக்கப்பட்டுள்ளதோடு நீதி நிலைநாட்டப்படுவதை வேண்டுகின்றனர். கொல்லப்பட்டவர்களில் குறைந்தது *40* வெளிநாட்டவர்களும் *45* குழந்தைகளும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டது. இந்த ஒருங்கிணைந்த தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னணியில் உள்ள முக்கிய சந்தேக நபராக ஒரு காலத்தில் தேசிய தவ்ஹீத் ஜமாத்தின் தலைவராக இருந்த சஹ்ரான் ஹாஷிம் என்பவரை புலனாய்வுத்துறையினர் அடையாளம் கண்டுள்ளனர். மேற்குறிப்பிட்ட சூழ்நிலைகளின் பின்னணியில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் நிகழ்ந்து *50* மாதங்கள் நிறைவடைந்ததை நினைவுகூரும் வகையில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரதானமான வழக்குகள் தொடர்பான முக்கியமான விவரங்களைக் கொண்ட அறிக்கையை தொகுப்பதற்கு சமூகம் மற்றும் சமயங்களுக்கான மத்திய நிலையம் ஒரு முன்னெடுப்பை மேற்கொண்டுள்ளது. இந்த அறிக்கையானது உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்ட *11* வழக்குகளை உள்ளடக்கியது. இந்த வழக்குகள் ஒவ்வொன்றின் முன்னேற்றத்தின் ஒட்டுமொத்த சுருக்கமும் இதில் வழங்கப்படுகிறது.

உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புகளின் பின்னணியில் பிரதான சூத்திரதாரியாகச் செயற்பட்டதாகக் கூறப்படும் நௌபர் மௌலவி உள்ளிட்ட *25* பேருக்கு எதிராக தொடரப்பட்ட கொழும்பு மேல்நீதிமன்றம் இல.*1*இல் *HC (TAB) 2972* இலக்கம் கொண்ட குற்றவியல் வழக்கு, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான முக்கியமான குற்றவியல் வழக்காகக் கருதப்படுகிறது. இவ்வழக்கு மூன்று நீதிபதிகள் முன்னிலையில் விசாரிக்கப்பட்டு, *23,270* குற்றச்சாட்டுகள் அடங்கிய குற்றப்பத்திரிக்கைகள் *2021* ஒக்டோபர் *4*ஆம் திகதியன்று குற்றம் சாட்டப்பட்டவருக்கு வழங்கப்பட்டன. தற்போது குற்றப்பத்திரிகைகள் தொடர்ந்தும் வாசிக்கப்பட்டு வருகின்றன. *2021* ஆம் ஆண்டு ஒக்டோபர் *1* ஆம் திகதி முன்னாள் பொலிஸ் மாஅதிபர் *(IGP),* பூஜித் ஜயசுந்தரவுக்கு எதிராக தொடரப்பட்ட *HC (TAB) 2900/21* என்ற இலக்கம் கொண்ட வழக்கில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் குற்றவியல் அலட்சியம் தொடர்பாக, கொழும்பு மேல் நீதிமன்றத்தின் மூவர் அடங்கிய நீதிபதிகள் குழாம் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்தது. *2022* ஆம் ஆண்டு பெப்ரவரி *18* ஆம் திகதி, கொழும்பு உயர் நீதிமன்றத்தின் மூவர் அடங்கிய நீதிபதிகள் குழாம் அவரது வாதத்திற்கு அழைப்பு விடுக்காமல் அவரை விடுவிக்குமாறு ஏகமனதாக உத்தரவு பிறப்பித்தது. இவ்வழக்கு மேன்முறையீடு செய்யப்பட்டு தற்போது உச்ச நீதிமன்றத்தில் உள்ளது. அதேபோன்று முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோவுக்கு எதிராக *2021* ஆம் ஆண்டு ஒக்டோபர் *1* ஆம் திகதி கொழும்பு மேல்நீதிமன்றில் தொடரப்பட இல. *HC (TAB) 2899/2021* வழக்கில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான குற்றவியல் அலட்சியத்திற்காக குற்றப்பத்திரிகை சமர்ப்பிக்கப்பட்டது. அவரது வாதத்திற்கு அழைப்பு விடுக்காமல் அவரை விடுவிக்குமாறு ஏகமனதாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஆனால் இவ்வழக்கு மேல்முறையீடு செய்யப்பட்டு தற்போது உச்சநீதிமன்றத்தில் உள்ளது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக *2019* இல் பன்னிரண்டு அடிப்படை உரிமைகள் விண்ணப்பங்கள் (இல. *163/19* உடன் *165/19, 166/19,*

*184/19, 188/19, 191/19, 193/19, 195/19, 196/1819, 19719, 19719 /19,* மற்றும் *293/19)* உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டன. மேலும் அவை உச்ச நீதிமன்றத்தின் முழுமையான அமர்வின் முன்னால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. *2023* ஜனவரி *12*ஆம் திகதி மனுதாரர்கள் தாக்கல் செய்த மேற்கண்ட அனைத்து மனுக்கள் தொடர்பாகவும் தீர்ப்பை வழங்கிய உச்சநீதிமன்றம், பிரதிவாதிகளுக்கு இழப்பீடு வழங்குமாறு உத்தரவு பிறப்பித்தது. தீர்ப்புக்கு இணங்க அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளை *reparations.gov.lk* என்ற இணையதளத்தில் காணலாம்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குண்டுதாரிகளில் ஒருவருடன் தொடர்பு பட்ட *Save the Pearls* தொண்டு நிறுவனத்துடன் தொடர்பு வைத்திருந்ததாகக் கூறப்படும் ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு எதிராக வழக்கு இலக்கம் *HC 78/2021*இன் வழக்கு தொடரப்பட்டது. வழக்கு இன்னும் நடந்து கொண்டிருக்கிறது. *2023* ஜூலை *14*ஆம் திகதி இதன் குறுக்கு விசாரணை நடத்தப்படவுள்ளது. புத்தளத்தில் மத்ரஸா பாடசாலயில் தீவிரவாதத்தை பரப்பியதாக கூறப்படும் வழக்கில் லுக்மான் மௌலவி, முகம்மது வஸீர் மௌலவி மற்றும் சாகில் கான் மௌலவி ஆகியோர் மீது வழக்கு இலக்கம் *188/2021*இன் கீழ் வழக்கு தொடரப்பட்டது. விசாரணை திகதி *2023* ஜூலை *10* என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வழக்கு இலக்கம் *23084/22* என்பது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு எதிராக நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட தனிப்பட்ட முறைப்பாடு ஆகும். இந்த வழக்கில், ஸஹ்ரான் ஹாஷிம் மற்றும் அவரது ஆதரவாளர்களை கைது செய்ய முப்படைகள் மற்றும்/அல்லது பொலிஸாருக்கு வழிகாட்டத் தவறியதாகவும்/அல்லது கண்காணிப்பை மேற்கொள்ளத் தவறியதாகவும்/அல்லது உயிர்த்த ஞாயிறு பண்டிகையின் போது ஏற்படும் பாதிப்புகள் மற்றும் உயிரிழப்புகளைத் தடுக்கத் தவறியதாகவும் குற்றம் சாட்டப்பட்டவர் பாதுகாப்பு அமைச்சராக தனது சட்டப்பூர்வ கடமைகளை செய்யத் தவறியதாகவும்

முறைப்பாட்டாளர் குற்றம் சாட்டியுள்ளார். இந்த வழக்கு தற்போது ரிட் மனுவின் உத்தரவு கிடைக்கும் வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு இலக்கம் *354/22*இன் கீழ் மேன்முறையீடு தாக்கல் செய்யப்பட்டது. மேன்முறையீட்டுத்தரப்பினால் வழக்கு இலக்கம் *23084/22* இல் நீதவான் நீதிமன்றத்தினால் முன்னாள் ஜனாதிபதியை கோட்டை நீதவான் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை பிறப்பித்த உத்தரவு சட்டவிரோதமானது எனவும் செல்லுபடியற்றது எனவும் மற்றும் சட்டத்தில் எந்த விளைவையும் கொண்டிருக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. இந்த வழக்கு தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில் தற்போது வாதத்திற்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. *HC 4485/21* இலக்கம் கொண்ட மாவனல்லை வழக்கில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பதினெட்டு குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டன. குற்றவாளிகள் அனைவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதால் இந்த வழக்கு *2023* ஜனவரி *18* ஆம் திகதி முடிவுக்கு வந்தது. வனாத்தவில்லுவ பிரதேசத்தில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய பயிற்சி முகாம் மற்றும் வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பில் புத்தளத்தில் வழக்கு இல. *Tab/107/2021* இன் கீழ் அபு ஹனிபா மொஹமட் முபீஸ் என்கிற முபீஸ் என்கிற அபுதாஹிதா மற்றும் மேலும் *5* நபர்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது. தற்போது, குற்றம் சாட்டப்பட்டவர்களிடம் இருந்து வாக்குமூலம் கிடைத்துள்ளதால், அந்த வாக்குமூலத்தின் நம்பகத்தன்மை குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. மேலும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கவிஞர் அஹ்னாஃப் ஜெஸீம் மீது அவரது தீவிரவாத சித்தாந்தங்கள் எனக்கூறப்படும் கருத்துகளுக்கு எதிராக வழக்கு இல. *HC 148/2021*இன் கீழ் தொடரப்பட்ட வழக்கு இன்னும் நடந்து வருகிறது.

மேற்கூறிய வழக்குகள் சமூகம் மற்றும் சமயம் என்பனவற்றுக்கான நிலைத்தினால் உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்டன. மேலும் நீதிமன்ற நடவடிக்கைகள் மற்றும் ஏனைய ஊடக அறிக்கைகளால் பூர்த்தி செய்யப்பட்ட *CSR* இன் சோதனை கண்காணிப்பு அறிக்கைகளின் அடிப்படையில் இந்த விரிவான அறிக்கை உருவாக்கப்பட்டது. மேலும், சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் பொலிஸாரிடமிருந்து *RTI* விண்ணப்பங்கள் மூலம் நாம் பெற்ற வழக்கு இலக்கங்கள் மற்றும் வழக்கு விவரங்களின் முழுப் பட்டியல் இணைப்புகளாக இணைக்கப்பட்டுள்ளன.

## பொருளடக்கம்

**பிரிவு** *1:* **உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களில் குற்றம் சாட்டப்பட்ட** *25* **நபர்களுக்கு எதிராகத் தொடரப்பட்ட பிரதான குற்றவியல் வழக்கு***- HC (TAB) 2972/21* **....7**

*2***ஆவது தொகுதி***:* **நவ்பர் மௌலவி உள்ளிட்ட பிரதிவாதிகள்** *25* **பேருக்கு எதிரான வழக்கின் முக்கிய அம்சங்கள்** *- HC (TAB) 2972/21* **.................................................................. 11**

**பிரிவு** *3:* **உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை தடுக்கத் தவறியமைக்காக முன்னாள் பாதுகாப்பு செயலாளருக்கு எதிரான வழக்கு** *- HC (TAB) 2899/2021* **........................................... 18**

**பிரிவு** *4:* **உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பிலான அடிப்படை உரிமைகள் வழக்குகள்** *– SC FR 163/2019, SC FR 165/2019, SC FR 166/2019, SCFR 184/2019, SC FR 188/2019, 919191 193/2019, SC FR 195/2019, SC FR 196/2019, SC FR .***இல***. 197/19, SC FR 198/2019, SCFR 293/2019* **............................................................. 23**

**பிரிவு 5: ஹெஜாஸ் ஹிஸ்புல்லா மற்றும் ஏனையோருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கு HC 78/2021 .................................................................................................... 39**

**பிரிவு** *6: 3* **மௌலவிமாருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கு***- HC 188/2021* **....................... 40**

**பிரிவு** *7:* **முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிரான தனிப்பட்ட முறைப்பாடு ..................................................................................................... 41**

**பிரிவு** *8:* **முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் வழக்கு** *- WRIT 354/22* **........................................... 42**

**பிரிவு** *9:* **மாவனல்லை புத்தர் சிலை சேதப்படுத்தல் தொடர்பான ................................ 47**

**பிரிவு** *10:* **வனாதவில்லுவ பயிற்சி முகாம் மற்றும் வெடிபொருட்கள் தொடர்பான வழக்கு** - **புத்தளம்** */TAB 107/2021* **..................................................................................................... 49**

**பிரிவு 11: அஹ்னாஃப் ஜெசீமுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கு- HC 148/2021 ...... 51**

இணைப்பு 1....................................................................................................................... 61

இணைப்பு 2....................................................................................................................... 73

இணைப்பு 3....................................................................................................................... 78

## பிரிவு *1:* உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களில் குற்றம் சாட்டப்பட்ட *25* நபர்களுக்கு எதிராகத் தொடரப்பட்ட பிரதான குற்றவியல் வழக்கு- *HC (TAB) 2972/21*

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை மேற்கொள்வதற்கு சதி செய்தமை, உதவி வழங்கியமை உடந்தையாக இருந்தமை உள்ளிட்ட *23270* குற்றச்சாட்டுகளின் கீழ் நவ்பர் மௌலவி உள்ளிட்ட பிரதிவாதிகள் *25* பேருக்கு எதிராக கொடுக்கப்பட்டுள்ள வழக்கு,[1] *2022* ஜனவரி மாதம் *12* ஆம் திகதி கொழும்பு மூவரடங்கிய விசேட மேல் நீதிமன்றத்தின் முன்பாக அழைக்கப்பட்டது.[2] தமித் தோட்டவத்த, அமல் ரணராஜா மற்றும் நவரத்ன மாரசிங்க ஆகிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் அமர்வு முன்னலையில் இவ் வழக்கு அழைக்கப்பட்டது. அன்றைய தினம் சட்டமாஅதிபர் திணைக்களத்தின் சார்பில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திருமதி ஹரிப்ரியா ஜயசுந்தர விண்ணப்பம் ஒன்றை முன்வைத்து குற்றப்பத்திரிகையை தமிழ் மற்றும் சிங்கள மொழிகளுக்கு மொழிபெயர்ப்பதற்கு இன்னும் காலம் தேவைப்படுவதாகத் தெரிவித்தார்.[3] இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினால் தமிழ்மொழி பேசும் சட்டத்தரணிகள் *9* பேர் அனுப்பப்பட்டிருந்ததோடு சட்டத்தரணிகளது பிரதிநிதித்துவம் இல்லாத குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் சட்டத்தரணிகளாக அவர்கள் முறையாக நியமிக்கப்பட்டனர்.[4] எனவே தற்போது பிரதிவாதிகள் *25* பேர் சார்பிலும் சட்டத்தரணிகளின் பிரதிநிதித்துவம் உண்டு.[5]

*22*ஆம், *23*ஆம் மற்றும் *24*ஆம் பிரதிவாதிகள் சார்பில் சட்டத்தரணி பிணை வேண்டுகோள் ஒன்றை முன்வைத்த போதும் ஏனைய பிரதி வாதிகளின் பிணை வேண்டுகோள்களுக்குச் செவிமடுத்ததன்பின்னர் பொதுவான தெளிவுபடுத்தல் ஒன்றை செய்வதாக மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.[6] அதன்படி அடுத்து வரும் நாளில்

அவர்கள் அனைவருக்கும் பிணை வேண்டுகோள்களை முன்வைக்க முடியும் என நீதிமன்று பிரதிவாதிகளின் சட்டத்தரணிகளுக்கு தெரிவித்தது.[7] பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பில் தோன்றிய ஜனாதிபதி சட்டத்தரணிகளுக்கு தாம் அதற்கு முந்தைய சந்தர்ப்பமொன்றில் வழக்கின் பிரதியொன்றை *(brief)* கையளித்ததாக மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத்துக்கு தெரிவித்தார்.[8]

*2022* ஆம் ஆண்டு மார்ச் *03* ஆம் தேதி, வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, வழக்கின் அனைத்து தரப்பினரையும் வழக்கு விசாரணைக்கு முந்தைய விசாரணைக்கு அழைக்குமாறு நீதிமன்று நெறிப்படுததியது.[9] அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைச்சாலைகளின் அதிகாரிகளுக்கு குற்றஞ்சாட்டப்பட்டவர்களை வழக்கு விசாரணைக்கு முந்தைய விசாரணைக்கு ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது.[10] இந்த வழக்கின் குற்றப்பத்திரிகைகளின் தமிழ் மற்றும் ஆங்கில மொழிபெயர்ப்புகளை மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றுக்கு முன்வைத்துள்ளார்.[11] சில சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு பிணை கோரியபோதும் பிணை பெறுவதற்கு சட்டமா அதிபரிடம் அனுமதி கேட்குமாறும், பிணை அனுமதிப்படவில்லையெனில் அதனை மீண்டும் நீதிமன்றத்தில் தெரிவிக்குமாறும் தெரிவிக்கப்பட்டது.[12] வழக்கு விசாரணையை தொடங்குவதற்கான அனைத்து தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டதா என்பதை பரிசீலிப்பதற்கு இவ்வழக்கினை மே *12* ஆம் திகதி மீண்டும் அழைப்பதற்கு தீர்மானிக்கப்படது.[13]

*2022* ஒக்டோபர் *03*ஆம் திகதி மேலதிக சொலிசிட்டர் ஜெனரல், குற்றம் சாட்டப்பட்டவர்களின் பிணை மனுக்கைகளை ஆட்சேபித்து எழுத்துப்பூர்வ சமர்ப்பணங்களை முன்வைத்தார். கணினி ஆதாரங்கள் அடங்கிய பென் டிரைவ்கள் மற்றும் *DVD* இறுவட்டுக்களை மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்று மட்டும் பிரதிவாதி தர்ப்புக்கு

ஒப்படைக்கப்பட்டது. அந்த சேமிப்பக சாதனங்களில் வழக்கு தொடர்பான பெரிய அளவிலான தரவுகள் இருப்பதால், கணினி ஆதாரங்களை ஆய்வு செய்ய பாதுகாப்பிற்கு போதுமான அவகாசம் அளிக்குமாறு அவர் நீதிமன்றத்தை நாடினார்.[14] சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு மூவரைக் கொண்ட நீதிபதிகள் குழாம் கணினி ஆதாரங்களை ஆய்வு செய்வதற்கு பிரதிவாதி தரப்புக்கு அடுத்த விசாரணையில் இருந்து *45* நாட்கள் கால அவகாசம் அளித்தது. குற்றம் சாட்டப்பட்ட அனைவருக்கும் பிணை கோரி பிரதிவாதிகள் தரப்பு பிணை மனுக்களை தாக்கல் செய்தது, அதன் உத்தரவு அடுத்த விசாரணையில் வழங்கப்படும்.[15] *13*ஆவது குற்றவாளியின் சார்பில் தடயவியல் மருத்துவ அறிக்கை மற்றும் பிணை மனு நீதிமன்றத்திலும் சட்டமா அதிபர் திணைக்களத்திலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. *13*ஆவது குற்றவாளி தொடர்பான மனநல அறிக்கையை வரவழைக்க சிறப்பு மனநல மருத்துவர் ஒருவர் அழைக்கப்பட்டுள்ளார். இந்த வழக்கு *2022* நவம்பர் *24*ஆம் திகதி பிற்பகல் *2.00* மணிக்கு மேலும் வழக்குவிசாரணைக்கு முந்தைய விசாரணை மற்றும் பிணை மனு மீதான உத்தரவுக்கு அழைக்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.[16]

*2022* நவம்பர் *24*ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு முந்தைய விசாரணை நிர்ணயிக்கப்பட்டது. முன்மொழியப்பட்ட சேர்க்கைகளுடன் அரசு தரப்பு பிரதிவாதிகள் தரப்பின் அனைத்து சட்டத்தரணிகளுக்கும் ஒரு வீடியோ இறுவட்டு வீதம் வழங்கியது.[17] சில உண்மைகள் ஒப்புக் கொள்ளப்பட்டாலும் மற்றவை முரண்படுவதாக பிரதிவாதிகள் தரப்பு சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். பிரதிவாதிகள் தரப்பு சட்டத்தரணிகள் கலந்துரையாட விரும்பினால் எந்த நேரத்திலும் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு வருகை தருவதை வரவேற்பதாக மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத்திற்கு அறிவித்தார். மேலதிக சொலிசிட்டர் ஜெனரல், குற்றப்பத்திரிகைகளை வாசித்து அவை எவ்வாறு புரிந்து கொள்ளப்பட வேண்டும் என்பதை

நீதிமன்றத்தில் முன்வைக்க அனுமதி கோரினார்.[18] அதன்படி அதனை நீதிமன்றத்தில் முன்வைக்க அனுமதி வழங்கப்பட்டது. மேற்குறித்த ஆவணம் அச்சிடப்பட்டால் குற்றம் சாட்டப்பட்ட ஒவ்வொருவருக்கும் சுமார் 1900 பக்கங்கள் செலவழிக்கப்பட நேரும் எனவும், ஆகையால் அதனை சட்டத்தரணிகளுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பலாம் அல்லது குறுந்தகடு மூலம் வழங்கலாம் எனவும் மேலதி சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத்தில் தெரிவித்தார். [19] மேலும், மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றப் பதிவாளரிடம் இது தொடர்பான வழக்குக் கட்டுரைகளை இந்த நீதிமன்றில் ஒப்படைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. அரசாங்கத் தரப்பு சாட்சி இலக்கம் 1 பேராசிரியர் ரொஹான் குணரத்ன, மற்றும் சாட்சி இலக்கம் 2 சுரேஷ் சாலே ஆகியோர் சாட்சியமளிக்க அழைக்கப்படுவார்கள் என்று அரசாங்கத் தரப்பு நீதிமன்றத்திற்கு அறிவித்தது. இவ் விடயம் தொடர்பில் 2023 ஜனவரி 4 மற்றும் 5 திகதிகளில் வழக்கு விசாரணை செய்வதாகத் தீர்மானிக்கப்பட்டது.[20]

2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4 ஆம் திகதி, 1ஆவது மற்றும் 10ஆவது குற்றவாளிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றில் மனுவொன்றை சமர்ப்பித்து, வாதப் பிரதிவாதங்களை முன்வைப்பதற்கும் நீதியான விசாரணையை நடத்துவதற்கும் ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை உள்ளிட்ட ஆவணங்கள் தேவை எனத் தெரிவித்தார்.[21] எனினும் நீதிமன்றம் இந்த கோரிக்கையை நிராகரித்தது. 2ஆவது சாட்சியான சுரேஷ் சாலே தற்காலிகமாக விடுவிக்கப்பட்டார். 14ஆவது குற்றவாளிக்கு காசநோய் இருந்ததால் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படாததன் காரணமாக அன்றைய தினம் நீதிமன்ற நடவடிக்கைகளைத் தொடர முடியவில்லை.[22]

2023 ஜனவரி 5ஆம் திகதி பிணை தொடர்பில் குற்றவாளிகளின் எழுத்துப்பூர்வ சமர்ப்பித்தல்களைப் பரிசீலித்த நீதிமன்றம், குற்றம்

சாட்டப்பட்ட அனைவருக்கும் பிணை வழங்க மறுத்தது.[23] *2023* பெப்ரவரி *1* ஆம் திகதியன்று வழக்கை விரைவுபடுத்தும் வகையில் ஒப்புக்கொள்ளல் பற்றி விவாதிக்க குற்றம் சாட்டப்பட்டவர்களின் வழக்கறிஞர்களை சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு வருகை தருமாறு மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் முன்மொழியப்பட்டது. அதனை சட்டத்தரணிகள் ஏற்றுக்கொண்டனர். *2023* பெப்ரவரி *6, 9* மற்றும் *10* ஆகிய திகதிகள் நிர்ணயிக்கப்பட்டன..[24] *2023* பெப்ரவரி *28*ஆம் திகதி *17*ஆவது குற்றவாளி *2023* பெப்ரவரி *5* ஆம் தேதி சிறைக்குள் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தபோது மரணித்ததாக மகசின் சிறைச்சாலை நீதிமன்றத்திற்கு அறிவித்தது. சில அச்சுப்பிழைகள் மற்றும் *17*ஆவது குற்றவாளியின் மரணம் காரணமாக குற்றப்பத்திரிகையில் திருத்தம் செய்ய சட்டமா அதிபர் திணைக்களம் சார்பாக ஆஜராகிய சட்டத்தரணிகள் நீதிமன்றத்திடம் அனுமதி கோரினர். [25]

*2023* மார்ச் *31*ஆம் திகதி சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் வாசிக்கப்பட்ட குற்றப்பத்திரிகைகள் இரண்டு திரைகளில் ஒன்றில் சிங்கள மொழிப் பிரதியாகவும் மற்றொன்றில் தமிழ் மொழிபெயர்ப்பாகவும் காட்சிப்படுத்தப்பட்டன.[26] மே *24* மற்றும் ஜூன் *2* ஆம் திகதிகளில் இந்தக் குற்றச்சாட்டுகளின் வாசிப்பு தொடர்ந்தது. ஜூன் மாதம். தற்போதைய நிலவரப்படி *4520* குற்றப்பத்திரிகைகள் வாசிக்கப்பட்டுள்ளதோடு குற்றம் சாட்டப்பட்டவர்கள் அனைவரும் இந்தக் குற்றப்பத்திரிகைகளை குற்றமற்றவர்கள் என தெரிவித்துள்ளனர்.[27] குற்றப்பத்திரிகைகளின் மேலதிக வாசிப்புகளை *2023* **ஜூலை** *11,* **ஆகஸ்ட்** *2* **மற்றும் ஆகஸ்ட்** *7* **ஆம் திகதிகளில் பிற்பகல்** *2* **மணிக்கு** நிகழ்த்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. [28]

## *2*ஆவது தொகுதி: நவ்பர் மௌலவி உள்ளிட்ட பிரதிவாதிகள் *25* பேருக்கு எதிரான வழக்கின் முக்கிய அம்சங்கள் *- HC (TAB) 2972/21*

2022 ஜனவரி மாதம் 18ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலை தடுக்காதிருந்ததன் மூலம் தனது கடமையைத் தட்டிக்கழித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் உள்ள முன்னாள் பொலிஸ்மாஅதிபர் திரு. பூஜித் ஜயசுந்தரவுக்கு எதிரான வழக்கு,[29] கொழும்பு மூன்று நபர் மேல்நீதிமன்றம் முன்னிலையில் மீண்டும் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது [30]. அன்றைய தினம் மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மாஅதிபர் திரு. தேசபந்து தென்னகோன் இந்த வழக்கில் சாட்சியமளித்தார் [31]. அரச புலனாய்வுப் பிரிவினால் 2019 ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி தேசிய புலனாய்வுப் பிரிவின் பிரதானிக்கு அனுப்பிவைக்கப்பட்ட தகவல் மேல் மட்டத்திலிருந்து கீழ் மட்டத்துக்கு அனுப்பப்பட்ட இன்னுமொரு தகவலாக மட்டுமே இருந்தது என திரு. தேசபந்து தென்னகோன் இங்கு குறிப்பிட்டார்[32]. சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் இந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக கிடைத்த தகவல் நிச்சயமற்றதாக இருந்ததாகத் தெரிவித்தார்.[33] புலனாய்வுத் தகவல் தொடர்பாக அனைத்து பொறுப்பு வாய்ந்த பிரிவுகளையும் அழைத்து ஒன்றிணைந்து கலந்துரையாடி உடனடியாக நடவடிக்கை எடுத்திருந்தால் அநேகமாக உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களைத் தடுத்து நிறுத்தியிருக்கலாம் என அவர் மேலும் தெரிவித்தார்[34]. சாட்சியாளர் மூன்று நாள் விடுமுறைக்கு விண்ணப்பித்திருந்ததோடு ஏப்ரல் 21 ஆம் திகதி விடுமுறை பெற்றிருந்தார் [35]. அதன்படி மேல் மாகாணம் தெற்கு சிரேஷ்ட பிரதி பொலிஸ்மாஅதிபர் சாட்சியாளரின் விடுமுறைக் காலத்தினுள் சாட்சியாளருக்கு பதிலாக கடமை புரிவதற்காக நியமிக்கப்பட்டிருந்தார் [36]. அதேபோன்று சாட்சியாளர் உயிர்த்த ஞாயிறு சம்பவம் தொடர்பில் அறிந்து கொண்டபோது தாம் விடுமுறையில் இருந்தபோதும் தனது அதிகார பிரதேசத்துக்கு வருகை தந்ததாக மேலும் குறிப்பிட்டார் [37].

2022 ஜனவரி மாதம் 18 ஆம் திகதி சாட்சியாளரான மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மாஅதிபர் திரு. தேசபந்து தென்னகோன் (பிரதிவாதியின் சட்டத்தரணியினால்) குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்[38]. அதன்போது 2019 ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதியிடப்பட்ட பொலிஸ்மாஅதிபருக்கு அனுப்பப்பட்ட கடிதம் ஒன்றை சாட்சியாளர் அடையாளம் கண்டுகொண்டார் [39]. முன்னாள் பொலிஸ் மாஅதிபரால் இந்த ஆவணம் 4 அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டதாக இதன்போது கண்டறியப்பட்டது [40]. முன்னாள் பொலிஸ்மாஅதிபர் குறித்த பிரிவுகளுக்கு அறியப்படுத்தியதனால் இந்த தகவல்கள் சாட்சியாளருக்கு கிடைக்கப்பெற்றன என்பது இதன்போது ஏற்றுக்கொள்ளப்பட்டது[41].

2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19 ஆம் திகதி இந்த வழக்கு அழைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் முறைப்பாட்டாளர் தரப்பு சாட்சியாக குறித்திருந்த அரச புலனாய்வு சேவை முன்னாள் தலைவர் நிலந்த ஜயவர்தன குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் பொலிஸ்மாஅதிபர் பூஜித ஜயசுந்தரவுக்கு அனுப்பியிருந்த புலனாய்வு அறிக்கைகளை உள்ளடக்கிய 38 ஆவணங்களுடன் தொடர்புடைய மூல ஆவணங்களை நீதிமன்றுக்கு சமர்ப்பிதற்காக சாட்சியாளரொருவர் அன்றைய தினம் அழைக்கப்பட்டிருந்தார் [42]. சாட்சியாளர் ஊடாக குறித்த மூல ஆவணங்கள் குறிக்கப்பட்டதோடு, சில ஆவணங்களில் குறைபாடுகள் இருந்தமையும் ஒன்றுக்கொன்று முரணான ஆவணங்கள் காணப்பட்டமையும் நீதிமன்றின் அவதானிப்புக்குள்ளாகியது [43]. ஏதேனுமொரு விசாரணையை நடத்தும்போது அதனுடன் தொடர்புடைய முழுமையான அறிக்கையை நீதிமன்றம் மற்றும் சட்டமாஅதிபர் திணைக்களத்துக்கு அனுப்புவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மூவர் அடங்கிய நீதிபதிகள் குழாமின் உறுப்பினரான நீதிபதி திரு. ஆதித்ய பட்டபெந்திகே திறந்த நீதிமன்றில் கூறியதாக அறியக்கிடைக்கிறது[44]. இவ்வாறான

விடயங்களால் நிகழ்வது குற்றப்புலனாய்வு நடவடிக்கைகள் மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கை வலுவிழப்பதே என நீதிபதி திரு. ஆதித்ய பட்டபெந்திகே தெரிவித்ததாக அறியக்கிடைக்கிறது [45]. அதேபோன்று, இந்த வழக்கு தொடர்பில் முறைப்பாட்டாளர் தரப்பினால் குறியிடப்பட்ட ஆவணங்களை பரிசீலித்த மூவர் அடங்கிய நீதிபதிகள் குழாமின் தலைவரான நீதிபதி திரு. நாமல் பலல்லே முறைப்பாட்டாளர் தரப்பு இந்த வழக்கை தொடுக்காதிருந்திருக்கலாம் என திறந்த நீதிமன்றில் தெரிவித்ததாக அறியக்கிடைக்கிறது[46].

*2022*ஆம் ஆண்டு ஜனவரி மாதம் *20*ஆம் திகரி கொழும்பு மூவர் அடங்கிய மேல் நீதிமன்றம் முன்னிலையில் இந்த வழக்கு மீண்டும் அழைக்கப்பட்டபோது [47], முறைப்பாட்டாளர் தரப்பு சார்பில் நீதிமன்றப் பதிவாளர் கௌரவ நீதிமன்றத்தின் முன் சத்தியப்பிரமாணத்தின் அடிப்படையில் சாட்சியம் வழங்குவதற்காக அழைக்கப்பட்டார் [48]. முறைப்பாட்டாளரது சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களில் குறியிட்டு சமர்ப்பித்ததன் பின்னர் குற்றஞ்சாட்டப்பட்டவர் சார்பில் பிரதிவாதம் முன்வைப்பதற்காக அழைப்பதா, இல்லையா என்பது தொடர்பிலான தீர்ப்பை வழங்குவதற்காக அடுத்த தினமாக *2022* பெப்ரவரி மாதம் *18*ஆம் திகதி வழங்கப்பட்டது[49].

*2022* ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் *18*ஆம் திகதியும் இந்த வழக்கு கொழும்பு மூவர் அடங்கிய மேல் நீதிமன்றம் முன்னிலையில் அழைக்கப்பட்டதோடு, முன்னாள் பொலிஸ்மாஅதிபர் திரு. பூஜித் ஜயசுந்தரவை பிரதிவாதத்துக்காக அழைக்காமலேயே நிரபராதி எனக்கருதி விடுதலை செய்வதற்கு [50] மூவர் அடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் ஏகமனதாக கட்டளையிட்டது [51]. அன்றைய தினம் நீதிமன்றினால் வழங்கப்பட்ட எழுத்து மூலமான கட்டளையில் காணப்படும் விடயங்கள் குறித்தும் கவனம் செலுத்துவது மிக முக்கியம் ஆகும்.

❖ **இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு எதிர் பூஜித் சேனாதி பண்டார ஜயசுந்தர** *HC (TAB) 2900/2021 (***பிரதிவாத அழைப்பு தொடர்பிலான கட்டளை*)* **இல் இனங்காணத்தக்க விசேட அம்சங்களின் சாராம்சம்**

- இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த திரு. பூஜித் ஜயசுந்தரவுக்கு எதிராக *855* குற்றச்சாட்டுகள் காணப்பட்ட போதும் அந்த குற்றங்கள் அனைத்துமே குற்றவியல் தண்டனை சட்டக்கோவையின் *102*ஆவது பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டும் எனத்தெரிகிறது[52]. அதன்படி இவ்வழக்கில் பிரச்சினைக்குரிய *855* குற்றச்சாட்டுகள் உள்ளனவெனக் காண்பிக்கப்பட்டாலும், உண்மையாகவே இங்கு பிரச்சினைக்குரியதாக உள்ளது குற்றவியல் தண்டனை சட்டக்கோவையின் *102*ஆவது பிரிவில் காட்டப்பட்டுள்ள உடந்தையாக இருக்கும் குற்றம் செய்யப்பட்டதா எனும் விடயமே எனத்தெரிகிறது.

- 'ஏதேனுமொன்றைச் செய்வதற்கு உடந்தையாக இருத்தல்' தொடர்பில் சட்டரீதியான நிலைமையை கருத்திற் கொள்ளும்போது "ஏதேனுமொன்றைச் செய்வதற்கு ஏதேனுமொரு செயல் அல்லது சட்டவிரோதமான முறையில் செய்யாது விடல் மூலமாக வேண்டுமென்றே உபகாரம் வழங்குபவர் அதனைச் செய்வதற்கு உடந்தையாக இருப்பவராவார்" என்பதை காண்பித்தல் முக்கியமானதாகும்[53]. அதன்படி உடந்தையாக இருப்பது தொடர்பாக சட்டவிரோதமான முறையில் செய்யாது விடல் என்பதில் உள்ள தொடர்பு தெளிவாகிறது.

- திரு. பூஜித் ஜயசுந்தரவை குற்றவாளி எனக் கருத வேண்டிய நிலைமையிலான பொறுப்பொன்றுக்கு உட்படுத்தும் அளவுக்கு செய்யாது விடல் ஒன்றை மேற்கொண்டதாக பாரிய மற்றும் ஆழப்பதிந்த சாட்சிகள் முன்வைக்கப்படவில்லை என்பதே

நீதிபதிகளின் நிலைப்பாடு என நீதிமன்றினால் எழுத்துமூலமாக வழங்கப்பட்ட கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ளது[54]. முறைப்பாட்டாளர் தரப்பினரால் செய்யாது விடல் என்ற விடயத்தை மாத்திரம் முன்வைப்பது போதாததோடு நிறைவேற்ற வேண்டியிருந்த கடமை மற்றும் அதில் குற்றஞ்சாட்டப்பட்டவர் ஆற்றாது விட்ட பணி அல்லது நிறைவேற்றாது விட்ட பொறுப்பு யாது என்பதை உறுதியான மற்றும் ஆழப்பதியத்தக்க சாட்சிகளை முன்வைத்து உறுதிப்படுத்தல் வேண்டும்.[55]. இங்கு முறைப்பாட்டாளர் தரப்பினர் அந்த பொறுப்பை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கவில்லை என்பதுடன், அதைச் செய்வதற்குத் தவறியுள்ளனர்.[56]

- இந்த வழக்கில் சாட்சியாளர்கள் *1200* பேரை பெயர்க்குறிப்பிட்டிருந்தபோதும், அவர்களுள் சுமார் *6* பேர் மாத்திரமே வழக்கு விசாரணையில் சாட்சியத்துக்காக அழைக்கப்பட்டிருந்தனர் [57], இது மிகவும் குறைந்த எண்ணிக்கையாகும்.
- "... **சட்டமாஅதிபர் இந்த வழக்கின் தகவல் அறிக்கையை முன் வைப்பதற்கு முன்னர் இருமுறை அது தொடர்பில் கவனம் செலுத்தியிருக்கலாம் என்பது எமது நம்பிக்கையாகும்**"[58] என நீதிமன்றினால் எழுத்துமூலமாக வழங்கப்பட்ட கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ளது

- "... **எமது நிலைப்பாடாவது, மேலே குறிப்பிடப்பட்ட விடயங்கள் மற்றும் சட்டரீதியான நிலைமைகளின் கீழ் ஆகக்குறைந்தது முறைப்பாட்டாளர் தரப்பின் முதன்மைக் சாட்சியாளர்களின் சாட்சியங்கள் நிறைவெய்தியதன் பின்னரேனும் குற்றச்சாட்டுகளை முன்கொண்டு செல்வதா இல்லையா என்பதை கருத்திற்கொள்வதற்கு சட்டமாஅதிபருக்கு வாய்ப்பிருந்தபோதும் அதனையும் முறைப்பாட்டாளர் தரப்பு**

**பயன்படுத்திக்கொள்ளவில்லை என்பதாகும்**" என நீதிமன்றினால் எழுத்துமூலமாக வழங்கப்பட்ட கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ளது.[59]"

- மேல்நீதிமன்ற நீதிபதி திரு. ஏ.கே.எம். படபெந்திகே அவர்களது கட்டளையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது "... மேற்கூறிய உணர்திறன் மிக்க விடயங்களை அடிப்படையாகக்கொண்டு எவ்வாறேனும் யாருக்கு எதிராகவேனும் வழக்குத் தொடுப்பதை (சாட்சியம் இன்றி) அனுமதிக்க முடியாது.[60]

- அதன்படி இந்த பிரதிவாத அழைப்பு தொடர்பான கட்டளையில் பிரதிவாதி தரப்பு வாதத்தை அழைக்காமலேயே குற்றஞ்சாட்டப்பட்ட திரு. பூஜித் ஜயசுந்தரவை அனைத்து குற்றச்சாட்டுகளிலிருந்தும் நிரபராதியாக்குவதற்கு மூன்று நபர் நீதிபதிகள் குழாம் தீர்மானித்துள்ளது[61].
- அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பிரதானி திரு. நிலந்த ஜயவர்தனவின் (முறைப்பாட்டாளர் தரப்பு சாட்சியாளர் 01) செய்யாது விடல் தொடர்பில் ஊகமொன்று மேல்நீதிமன்ற நீதிபதி ஏ.கே.எம். பட்டபெந்திகே அவர்களது கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அது தொடர்பிலான மேலதிக விவரங்களுக்கு கட்டளையின் 231, 232, 233, 235 பந்திகள் மீது கவனம் செலுத்துக.

- தற்போது, இந்த வழக்கு மேன்முறையீடு செய்யப்பட்டு உச்சநீதிமன்றத்தில் உள்ளது. இது 2023 மார்ச் 13ஆம் திகதி அழைக்கப்பட்டது, ஆனால் அது 2023 **ஜூலை** 4, 5, 11 **மற்றும்** 12 **ஆம்** திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டது.[62]

## பிரிவு 3: உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை தடுக்கத் தவறியமைக்காக முன்னாள் பாதுகாப்பு செயலாளருக்கு எதிரான வழக்கு - HC (TAB) 2899/2021

2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18ஆம் திகதி இந்த வழக்கு கொழும்பு மூவர் அடங்கிய நீதிமன்றத்தின் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் நீதிமன்றப் பதிவாளர் சாட்சியமளித்ததோடு [63] பிரேதப்பரிசோதனை அறிக்கை மற்றும் நீதிமன்ற வைத்திய அறிக்கை ஒன்றன் பின் ஒன்றாக சாட்சியங்அதுக முறைப்பாட்டாளர் தரப்பினால் குறியிடப்பட்டது.[64]

2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19ஆம் திகதி இந்த வழக்கு கொழும்பு மூவர் அடங்கிய மேல் நீதிமன்றத்தின் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் [65], பிரேதப்பரிசோதனை அறிக்கை மற்றும் அரச தடயவியல் நிபுணர் அறிக்கை நீதிமன்றுக்கு முன்வைக்கப்பட்டது.[66] முறைப்பாட்டாளர் தரப்பு சார்பாக தோன்றிய பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திரு சுதர்ஷன டி சில்வா நீதிமன்றின் முன்னிலையில் முறைப்பாட்டாளர் தரப்பு சாட்சி அழைப்புகள் நிறைவடைந்ததாக தெரிவித்தார்.[67] உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் திரு. ஹேமசிரி பெர்னாண்டோவுக்கு எதிரான வழக்கிலிருந்து அவரை விடுதலை செய்வதா அல்லது பிரதிவாதி தரப்பு வாதத்துக்காக அழைப்பதா என்ற கட்டளையை 2022 பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி பிறப்பிப்பதாக அன்றைய தினம் கொழும்பு மூவரடங்கிய மேல்நீதிமன்றம் தெரிவித்தது. [68].

2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி இந்த வழக்கு கொழும்பு மூன்று நபர் மேல் நீதிமன்றத்தின் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டதோடு, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் திரு ஹேமசிரி பெர்னாண்டோவை பிரதிவாதி தரப்பு வாதத்தை

அழைக்காமலே விடுதலை செய்வதற்கு [69] மூவர் அடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் ஏகமனதாக கட்டளை பிறப்பித்தது.[70]. அன்றைய தினம் நீதிமன்றத்தினால் எழுத்து மூலமாக வழங்கப்பட்ட கட்டளையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்துதல் முக்கியமானதாகும்.

❖ **இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு எதிர் திரு ஹேமசிறி பெர்னாண்டோ இல.** *HC (TAB) 2899/2021* **வழக்கில்** *(***பிரதிவாதி தரப்பு வாதத்தை அழைப்பதற்கான கட்டளை***)* **இனங்காணப்பட்ட விசேட அம்சங்களின் சாராம்சம்**

- இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்த ஹேமசிரி பெர்னாண்டோவுக்கு எதிராக *855* குற்றச்சாட்டுகள் இருப்பினும் அந்த குற்றங்கள் அனைத்தும் குற்றவியல் தண்டனை சட்டக் கோவையின் பிரிவு *102* உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டும் எனத்தெரிகிறது[71]. அதன்படி இவ்வழக்கில் பிரச்சனைக்குரிய *855* குற்றச்சாட்டுகள் உள்ளன எனக் காண்பிக்கப்பட்டாலும் உண்மையிலேயே இங்கு பிரச்சனைக்குரியதாக உள்ளது குற்றவியல் தண்டனை சட்டக்கோவை பிரிவு *102* எல் காட்டப்பட்டுள்ள உடந்தையாக இருத்தல் என்ற குற்றத்தை செய்துள்ளாரா என்ற விடயம் எனத்தெரிகிறது.

- 'ஏதேனுமொன்றைச் செய்வதற்கு உடந்தையாக இருத்தல்' [72], தொடர்பில் சட்டரீதியான நிலைமையை கருத்திற் கொள்ளும்போது "ஏதேனுமொன்றைச் செய்வதற்கு ஏதேனுமொரு செயல் அல்லது சட்டவிரோதமான முறையில் செய்யாது விடல் மூலமாக வேண்டுமென்றே உபகாரம் வழங்குபவர் அதனைச் செய்வதற்கு உடந்தையாக இருப்பவராவார்" என்பதை காண்பித்தல் முக்கியமானதாகும்"[73].

- திரு. ஹேமசிரி பெர்னாண்டோவை குற்றவாளி எனக் கருத வேண்டிய நிலைமையிலான பொறுப்பொன்றுக்கு உட்படுத்தும் அளவுக்கு செய்யாது விடல் ஒன்றை மேற்கொண்டதாக பாரிய மற்றும் ஆழப்பதிந்த சாட்சிகள் முன்வைக்கப்படவில்லை என்பதே நீதிபதிகளின் நிலைப்பாடு என நீதிமன்றினால் எழுத்துமூலமாக வழங்கப்பட்ட கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ளது[74]. முறைப்பாட்டாளர் தரப்பினரால் செய்யாது விடல் என்ற விடயத்தை மாத்திரம் முன்வைப்பது போதாததோடு நிறைவேற்ற வேண்டியிருந்த கடமை மற்றும் அதில் குற்றஞ்சாட்டப்பட்டவர் ஆற்றாது விட்ட பணி அல்லது நிறைவேற்றாது விட்ட பொறுப்பு யாது என்பதை உறுதியான மற்றும் ஆழப்பதியத்தக்க சாட்சிகளை முன்வைத்து உறுதிப்படுத்தல் வேண்டும்[75]. இங்கு முறைப்பாட்டாளர் தரப்பினர் அந்த பொறுப்பை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கவில்லை என்பதுடன், அதைச் செய்வதற்குத் தவறியுள்ளனர்[76].

- இவ்வழக்கில் திரு. ஹேமசிரி பெர்னாண்டோ ஊடகத்துக்கு தெரிவித்த ஒரு கருத்து தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. "...குறிப்பிட்ட சில விடயங்கள் நடைபெறுவது எமக்குத்தெரியும்..." என்ற கருத்தை குற்றஞ்சாட்டப்பட்டவர் ஊடகத்துக்கு தெரிவித்திருந்தாலும்[77], அதன்மூலம் குறிக்கப்படுவது குற்றச்சாட்டில் காட்டப்பட்டுள்ள தாக்குதல்தான் என்பது தொடர்பில் முறைப்பாட்டாளர் தரப்பு நீதிமன்றை திருப்தியடையச் செய்யவில்லை.[78]

- முன்வைக்கப்பட்டுள்ள சாட்சியங்களின் படி அரச புலனாய்வுச் சேவை வழக்கின் விடயப்பொருளான சம்பவம் தொடர்பில் நிச்சயமான போதுமான தகவல்களை தாக்குதலுக்கு முன்னர் வெளிப்படுத்திக்கொள்ளத் தவறியுள்ளமை புலனாகிறது.[79]

- இந்த வழக்கில் சாட்சியாளர்கள் *1200* பேரை பெயர்க்குறிப்பிட்டிருந்தபோதும், அவர்களுள் சுமார் *7* பேர் மாத்திரமே வழக்கு விசாரணையில் சாட்சியத்துக்காக அழைக்கப்பட்டிருந்தனர்.

- "... சட்டமாஅதிபர் இந்த வழக்கின் தகவல் அறிக்கையை முன் வைப்பதற்கு முன்னர் இருமுறை அது தொடர்பில் கவனம் செலுத்தியிருக்கலாம் என நாம் நம்புகிறோம்" என நீதிமன்றினால் எழுத்துமூலமாக வழங்கப்பட்ட கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ளது.[80]"

- "... எமது நிலைப்பாடாவது, மேலே குறிப்பிடப்பட்ட விடயங்கள் மற்றும் சட்டரீதியான நிலைமைகளின் கீழ் ஆகக்குறைந்தது முறைப்பாட்டாளர் தரப்பின் முதலாவது சாட்சியாளரின் சாட்சியம் நிறைவெய்தியதன் பின்னரேனும் குற்றச்சாட்டுகளை முன்கொண்டு செல்வதா இல்லையா என்பதை கருத்திற்கொள்வதற்கு சட்டமாஅதிபருக்கு வாய்ப்பிருந்தபோதும் அதனையும் முறைப்பாட்டாளர் தரப்பு பயன்படுத்திக்கொள்ளவில்லை என்பதாகும்" என நீதிமன்றினால் எழுத்துமூலமாக வழங்கப்பட்ட கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ளது.[81]"

- மேல்நீதிமன்ற நீதிபதி திரு. ஏ.கே.எம். படபெந்திகே அவர்களது கட்டளையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது "... **மேற்கூறிய உணர்திறன் மிக்க விடயங்களை அடிப்படையாகக்கொண்டு எவ்வாறேனும் யாருக்கு எதிராகவேனும் வழக்குத் தொடுப்பதை (சாட்சியம் இன்றி) அனுமதிக்க முடியாது**.[82]" "... முறைப்பாட்டாளர் தரப்பினாலேயே முன்வைக்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில் பாதுகாப்பு

அமைச்சின் செயலாளராக பணிபுரிந்த குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு சுயாதீனமாக தீர்மானம் எடுக்கும் சூழல் அரசியல் அதிகாரத்தினால் உருவாக்கப்படாதிருக்கும் நிலையில் ஏதேனும் ஒரு சம்பவம் நிகழ்ந்ததன் பின்னர் அதுகுறித்து அரச அதிகாரிகளுக்கு பொறுப்புச்சாட்டுவது நியாயமற்றது என குறிப்பிட விரும்புகிறேன்.'[83] "... முறைப்பாட்டாளர் தரப்பினால் நெறிப்படுத்தப்படும் அனைத்து சாட்சிகளையும் கருத்திற்கொள்ளும்போது குற்றஞ்சாட்டப்பட்டவர் அவ்வாறான சாதாரண செய்யாது விடல் ஒன்றையேனும் மேற்கொண்டமை தொடர்பில் சாட்சியங்கள் முன்வைக்கப்படவில்லை என நான் தீர்மானிக்கிறேன்.'[84] அதன்படி முறைப்பாட்டாளர் தரப்பு நீதிமன்றத்தின் முன்னிலையில் முறைப்பாட்டாளர் வழக்கில் குற்றவியல் சார்ந்த் செய்யாது விடல் ஒன்றை விடுத்து சாதாரணமான செய்யாது விடல் ஒன்றைக்கூட நிரூபிக்கவில்லை எனத் தெரிகிறது.

- அதன்படி இந்த பிரதிவாத அழைப்பு தொடர்பான கட்டளையில் பிரதிவாதி தரப்பு வாதத்தை அழைக்காமலேயே குற்றஞ்சாட்டப்பட்ட திரு. ஹேமசிரி பெர்னாண்டோவை அனைத்து குற்றச்சாட்டுகளிலிருந்தும் நிரபராதியாக்குவதற்கு மூவர் அடங்கிய நீதிபதிகள் குழாம் தீர்மானித்துள்ளது[85].
- அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பிரதானி திரு. நிலந்த ஜயவர்தனவின் (முறைப்பாட்டாளர் தரப்பு சாட்சியாளர் 01) செய்யாது விடல் தொடர்பில் ஊகமொன்று மேல்நீதிமன்ற நீதிபதி ஏ.கே.எம். பட்டபெந்திகே அவர்களது கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அது தொடர்பிலான மேலதிக விவரங்களுக்கு கட்டளையின் 245, 246 பந்திகள் மீது கவனம் செலுத்துக.

தற்போது, இந்த வழக்கு மேன்முறையீடு செய்யப்பட்டு உச்சநீதிமன்றத்தில் உள்ளது. இது 2023 மார்ச் 13ஆம் திகதி அழைக்கப்பட்டது. ஆனால் அது 2023 **ஜூலை** 4, 5, 11 **மற்றும்** 12 ஆம் திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டது.[86]

## பிரிவு 4: உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பிலான அடிப்படை உரிமைகள் வழக்குகள் – *SC FR 163/2019, SC FR 165/2019, SC FR 166/2019, SCFR 184/2019, SC FR 188/2019, 919191 193/2019, SC FR 195/2019, SC FR 196/2019, SC FR .***இல**. *197/19, SC FR 198/2019, SCFR 293/2019*

2022 ஜூன் 9 ம் திகதியன்று, பின்வரும் சான்றுகள் பரிசீலிக்கப்பட்டன. 2015 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலைத் தொடர்ந்து, 2015 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4 ஆம் திகதி முதல் 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி வரை புதிதாக அமைக்கப்பட்ட தேசிய அரசாங்கத்தின் பிரதமராக திரு. ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டதை அவதானிக்க முடிந்தது. அவர் ஒக்டோபர் மாதம் 20ஆம் திகதி தேசிய அரசாங்கத்திலிருந்து விலகினார். அதிமேதகு ஜனாதிபதி வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரதமரை பதவியிலிருந்து நீக்கி மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்தார். பின்வரும் குற்றஞ்சாட்டுகளை திரு.ரணில் விக்கிரமசிங்க அவர்கள் முன்வைத்தார்;

" ...இந் நிகழ்வு முழுவதும், அதிமேதகு ஜனாதிபதியின் நடத்தை சட்டவிரோதமானது என்றே நான் கருதுகிறேன். புதிய அரசாங்கம் நிறுவப்பட்டதாகக் கூறப்பட்டாலும் அது பாராளுமன்றத்தின் பெரும்பான்மையினரின் நம்பிக்கையைப் பெறவில்லை என்பதையும் உறுதி செய்ய முயற்சிக்கிறேன். பாராளுமன்றம் கலைக்கப்பட்டதை எதிர்த்து இந் நீதிமன்றத்தில் தொடர் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இவ் விடயம் தொடர்பில் இறுதித் தீர்மானம் எட்டப்படும் வரை மஹிந்த

ராஜபக்ஷ தலைமையிலான நடைமுறை அரசாங்கத்தை செயற்பட விடாது அல்லது தடுக்குமாறு மாண்புமிகு நீதிபதி தலைமையிலான நீதிமன்றம் இடைக்கால உத்தரவை பிறப்பித்துள்ளது. இக் காலப்பகுதியில் ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் பிரதமராக நியமித்தால் இன்னும் ஒரு நாள் கூட தாம் பதவியில் இருக்கப் போவதில்லை என ஜனாதிபதி பல பகிரங்க அறிக்கைகளை வெளியிட்டிருந்தார்."

மேலும், சஹ்ரானுக்கு எதிராக பிரதி பொலிஸ் மா அதிபர் நாலக டி சில்வா பகிரங்க பிடியாணையைப் பெற்றுள்ளதாகவும் குற்றம் சுமத்தப்பட்டது. 2018 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 2 ஆம் திகதி பகிரங்க பிடியாணை பிறப்பிக்கப்பட்ட பின்னர், சஹ்ரான் காணாமல் போயிருந்ததுடன், காத்தான்குடி, குலியாபிட்டி அல்லது குருநாகலில் பிரதி பொலிஸ் மா அதிபரால் அவரை கண்டுபிடிக்க முடியவில்லை. அவர் வெளிநாடு சென்றுள்ளாரா என்ற சந்தேகம் எழுந்ததால், அவரை கண்டுபிடிக்குமாறு பிரதி பொலிஸ் மா அதிபர் இன்டர்போலுக்கு தகவல் கொடுத்துள்ளார். அதன்பிறகு, அவர் இந்தியாவில் இருப்பது குற்றவியல் புலனாய்வு திணைக்களத்துக்கு தெரியவந்தது. தேசிய தவ்ஹீத் ஜமாத் *(NTJ)* தலைவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கோரிய கோப்பு தயாரிக்கப்பட்டு பயங்கரவாத புலனாய்வு திணைக்களத்தால் *(TID)* சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டது. 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 25 ஆம் திகதி, திரு. நாலக டி சில்வா, பிரமுகர் படுகொலை சதித்திட்டம் தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டார்.[87]

2022 ஆம் ஆண்டு ஜூலை 26 ஆம் திகதியன்று, தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான இந்த விவகாரத்தில் அரசியலமைப்பின் 35(1) வது சரத்தைப் பயன்படுத்த முடியுமா என்பது குறித்த தங்கள் நிலைப்பாட்டை அறிவிக்க மனுதாரர் மற்றும்

பிரதிவாதிகளுக்கான சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் ஆஜரானார்கள். ஆகஸ்ட் 2 ஆம் திகதி இச் சட்ட உண்மை தொடர்பான வாய்மொழி சமர்ப்பிப்பை வழங்க அனைத்து வழக்கறிஞர்களும் ஒப்புக்கொண்டனர். எனினும், ஜனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபாவினால் அன்றைய தினம் ஆஜராக முடியவில்லை. எனவே, அவரது சமர்ப்பிப்புகளை 2022 ஆம் ஆண்டு ஜூலை 27 ஆம் தினத்தன்று சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் உட்பட மனுதாரர்களின் மனுக்கள், பயங்கரவாத தாக்குதல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பொறுப்பானவர்களிடமிருந்து குற்றவழக்குத்தொடரவும், பொறுப்பேற்கவும் மற்றும் இழப்பீடு கோருவதற்காக தாக்கல் செய்யப்பட்டது. முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அரசியலமைப்பின் 35 ஆவது சரத்தின் கீழான விதிவிலக்கு தொடர்பான ஏற்பாடுகள் பொருந்தாது என ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜயவர்தன ஆகியோர் ஆட்சேபனைகளை முன்வைத்தனர். இவ் வழக்கு மேலதிக விசாரணைக்காக 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 02 ஆம் திகதி அழைக்கப்பட்டது. [88]

2022ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி,[89] ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் பின்வருமாறு தனது சமர்ப்பணத்தை முன்வைத்தார். அரசியலமைப்பின் 35(1) சரத்தின் கீழ், ஜனாதிபதியாக பதவி வகிக்கும் எந்தவொரு நபருக்கும் எதிராக அவர் தனது உத்தியோகபூர்வ அல்லது தனிப்பட்ட திறனுக்கேற்ப முறையிலோ செய்த அல்லது செய்யத் தவறிய எதற்கும் எதிராக எந்தவொரு நீதிமன்றத்திலோ அல்லது நியாயசபையிலோ எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவோ அல்லது தொடரவோ கூடாது என்று அவர் கூறினார். அரசியலமைப்பின் 35(1) சரத்தின் விதிகள் குறித்தும் கற்ற ஜனாதிபதி சட்டத்தரணி நீதிமன்றத்தின் கவனத்தை ஈர்த்தார். இந்

நடவடிக்கையை தொடர முடியுமா என்பதை தீர்மானிக்க, அரசியலமைப்பின் *35(1)* வது சரத்து மற்றும் அதற்கான காப்புவாசகம், *20* வது திருத்தத்தின் கருத்திற்கமைய விளக்கப்பட வேண்டும் என்றும் அவர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார்.[90]

*2022* ஒக்டோபர் *4* திகதியன்று, இறுதியாக நடைபெற்ற விசாரணையில் இருந்து சமர்ப்பிப்பு தொடர்ந்தது. தொகுப்பின் பக்க இலக்கம் *109*ல், *A9* எனக் குறிக்கப்பட்ட ஒரு ஆவணம் உள்ளது, திரு. சிசிர மென்டிஸினால் பொலிஸ் தலைமையதிபதிக்கு *(IGP)* அனுப்பிய கடிதம், நீதிமன்றத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தேசிய தவ்ஹீத் ஜமாத் *(NTJ)* கூட்டாளிகள் பல கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் ஒரு குறிப்பிட்ட வெளிநாட்டுப் தூதரகத்தை தாக்க திட்டமிட்டுள்ளதாக அரச புலனாய்வு சேவையின் *(SIS)* இன்டெல் தகவல்கள் பற்றிய விவரங்கள் அந்தக் கடிதத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. தாக்குதல்கள் தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுப்பதற்காக அனுப்பப்பட்ட திரு.சிசிர மெண்டிஸ் அவர்களால் செய்யப்பட்ட புறக்குறிப்பின் பக்கம் *157* இல் உள்ள சமகால ஆவணமும் இங்கு குறிப்பிடப்பட்டது.

அரசு தரப்பில் ஆஜரான சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் அவர்கள் *(SDSG)* ஏற்கனவே நீதிபதிகளிடம் சமர்ப்பிக்கப்பட்ட மற்றொரு சிறிய ஆவணத்தை பற்றி குறிப்பிட்டார். அச் சிறிய ஆவணத்தில் நகல் எடுக்கப்பட்ட பக்கத்தின் இரண்டாவது பத்தியின் *1*வது பொழிப்புரை குற்றவியல் நடைமுறைச் சட்ட கோவையைக் கொண்டிருந்தது. சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் *107*ம் பிரிவு மற்றும் துணைப்பிரிவு *1,2,3* ஆகியவற்றை மேற்கோள் காட்டி, ஒரு கடுமையான குற்றத்தைத் தடுக்க காவல்துறை தேவையான நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் என்பதை நிரூபித்தார். இது தொடர்பாக பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் *156*வது பிரிவும் குறிப்பிடப்பட்டிருந்தது. சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல், 'ஒரு குற்றத்தைத் தடுக்க அதிகபட்ச திறனைப் பயன்படுத்த வேண்டும்' என்பதை நிரூபிக்க, *1979*

இன் *17* ம் இலக்க சட்ட அமலாக்க அதிகாரிகளுக்கான ஐநா தீர்மானமத்தை குறிப்பிட்டு காட்டியுள்ளார். சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல், அவரது வாதத்தை மேலும் தொடரும் போது, " தீர்மானத்தில் "இடைச்செருகுதல்" எனும் வார்த்தையின் பயன்பாடு, தடுப்பதை பொறுத்த வரையில் முக்கிய அர்த்தத்தைக் கொண்டுள்ளது என்று கூறினார். இது ஒரு குற்றத்தைத் தடுக்க தலையீடு செய்வதைக் குறிக்கிறது.

சிசிர மெண்டிஸ் மற்றும் நிலந்த ஜயவர்தன ஆகியோர் தேவையான அதிகாரிகளுடன் தகவல்களை பரிமாரிக்கொண்டதன் மூலம் நிர்வாக ரீதியாக நியாயமான முறையில் செயற்பட்டதாக சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனர◌ால் அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளார். *AP province V Winsbury* தீர்ப்பை எடுத்துக்காட்டுவதன் மூலம் ஒரு பொது அதிகாரியின் இந்த சரியான தன்மை அல்லது நியாயத்தன்மை மேலும் நிரூபிக்கப்பட்டது.

"பொலிஸ் தனது புலன்களால் உணரக்கூடிய தகவல்களின் மீது செயல்பட்டு முடிவுகளை எடுக்க வேண்டும். மேலும் இங்கு வழங்கப்பட்ட தகவல் பீட்டா, ஆல்பா, அல்லது வேறு எந்த வகையான சைகை மொழியும் அல்ல, மாறாக உறுதியான மற்றும் துல்லியமான உண்மைகள் தான் அனுப்பப்பட்டன" என்று சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் கூறினார். நிலந்த ஜயவர்தனவின் கருத்துக்கு அமைய சிசிர மென்டிஸ் சரியான முடிவை எடுத்துள்ளார் என்றும் அவர் கூறினார். *2019* ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் *9* ஆம் திகதி நிலந்த ஜயவர்தனவின் சத்திய கடதாசியில் அவர் இதை குறிப்பிட்டுள்ளார், அதில் அவர் தாக்குதல்களை மேற்கொள்ளும் முக்கிய நபர்களாக இருந்த சஹ்ரான், ஷாஹித், மில்ஹான் மற்றும் ரில்வான் ஆகிய நான்கு நபர்களைக் குறிப்பிட்டிருந்தார்.

பொலிஸ் மா அதிபர் என்ன நடவடிக்கை எடுத்தார் என்று நீதிபதி கேட்டபோது, ஆவணத்தின் *126*வது பக்கத்தில் *R4A* என்று குறிக்கப்பட்ட ஆவணத்தை சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் அவர்கள் குறிப்பிட்டு காட்டினார். பின்வரும் பெறுநர்களுக்கு பொலிஸ் மா அதிபர் அனுப்பிய நான்கு எழுத்தாவணங்கள் குறித்த ஆவணத்தில் உள்ளன: சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் *(SDIG) (*மேல் மாகாணம்*)*, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் *(*குற்றங்கள் மற்றும் பொ.வி.அ.ப*)*, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் *(*சிறப்பு பாதுகாப்பு*)*, மற்றும் மத்திய புலனாய்வுத் திணைக்கள பணிப்பாளர் *(CID)*. ஆவணம் ஒரு ஒன்றிணைக்கப்பட்ட ஆவணம் என்பதால், ஆவணத்தில் சாராம்சப்படுத்தப்பட்ட அட்டவணை மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது என்று சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் அவர்கள் வாதிட்டார். பிரயால் தசநாயக்க மாத்திரமே கடிதத்திற்கு பதிலளித்து *VVIP*களுக்கு தகவல் தெரிவிக்கும் நடவடிக்கையை மேற்கொண்டார் என்றும், அவர் தனது கடமையை தவறவிடவில்லை என்றும் சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் வாதிட்டார். இதன்படி, சிசிர மெண்டிஸ் வழங்கிய தகவல்கள் உண்மையில் வழக்கிடத்தகுந்தவை என்பது நிரூபணமாகியுள்ளதாகவும் சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் மேலும் குறிப்பிட்டார்.

பின்னர் நீதிபதி இதை விட பொலஸ் மா அதிபரால் என்ன செய்திருக்க முடியும் என்று கேற்கப்பட்டது,அதற்கு சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் இவ்வாறு பதிலளித்தார், இந்த உடனிகழ்தகு விடயத்தை கருத்தில் கொண்டு, அவர் எடுத்த முடிவுகள் போதுமானதாக இல்லை, மேலும் சில கடிதங்களை அனுப்புவதன் மூலமாக மாத்திரம் பிரச்சினையை நிச்சியமாக சமாளிக்க முடியாது. மேலும், நிலந்த ஜயவர்தனவின் நீண்ட காலச் செயல்களான கருத்துக் குறிப்புகளை வைப்பது மற்றும் தேவையான அதிகாரிகளுக்கு உடனடி பதில்கள் போன்றவைக்கு உயர் அதிகாரிகளிடம் இருந்து தான் நடவடிக்கை

எடுக்கப்பட வேண்டும். நிலந்த ஜயவர்தன அங்கேயே தனது பணியை நிறுத்திக்கொள்ளவில்லை. பின்னர் *2019* ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் *16* ஆம் திகதி காத்தான்குடியில் மோட்டார் சைக்கிள் ஒன்று வெடித்துச் சிதறிய சம்பவத்தை அவர் பின் தொடர்ந்தார். நிலந்த ஜயவர்தன இது ஒரு பயிற்சியாகவோ அல்லது தாக்குதல்களுக்கான ஒத்திகையாக இருக்கலாம் என்று சந்தேகித்ததுடன், சம்பவத்தை முறையாக அறிக்கையிட்டுள்ளார்.

"சாதாரண சூழ்நிலையில், இந்த அதிகாரிகளுக்கு எவ்வாறு கடிதங்கள் கொடுக்கப்படுகின்றன?" என்று நீதிபதி கேட்ட போது, எடுத்துச்சென்று கையளிக்கப்படும் என்று சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் கூறினார், ஆனால் இந்த உண்மையை நிரூபிக்க எந்த ஆதாரமும் இல்லை. *2019* ஆம் ஆண்டு ஏப்ரல் *4* ஆம் திகதி முதல் அவர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் வரிசையை விளக்கும் நிலந்த ஜயவர்தனவின் சத்திய கடதாசி உள்ளடக்கிய *R13* என குறிக்கப்பட்ட ஆவணத்திற்கு சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் அவர்கள் நீதிபதிகளின் கவனத்தை ஈர்துதுச் சென்றார். 'மோட்டார் சைக்கிள் சம்பவத்தில்' ஈடுபட்டவர்களை கைது செய்யுமாறு கோரி கடிதம் அனுப்பியுள்ளதோடு அக் கடிதம் பொலிஸ் மா அதிபரால் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக அவரது சத்திய கடதாசியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனைக் குறிப்பிட்ட சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் அவர்கள், இந்தத் தாக்குதலைத் தடுப்பதற்காக நிலந்த ஜயவர்தனவின் செயற்பாடுகளை நிரூபிப்பதற்கான அனைத்துப் உருப்படிகளும் சந்தர்ப்ப சாட்சியங்களாகும் என நீதிபதிகளிடம் தெரிவித்தார்.

பொலிஸ் மா அதிபர் தனது துணை அதிகாரிகளிடமிருந்து பெற்ற கடிதங்களின் வரிசை எண்களை (தவறான) முறையில் ஆவணப்படுத்தியதுடன் (எந்த நடவடிக்கையும் எடுக்காமல்) அவற்றை வெறும் ஆவணமாக மாத்திரம் சேமித்து வைப்பதனூடாக அவர் அவரது

கடமைகளை தீவிரமாக புறக்கணித்திருப்பதற்கு சமம் என்று சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் அவர்கள் வாதிட்டார், அவரின் நடவடிக்கையின்மை அரச செயல்பாடுகளை கடுமையாகப் பலவீனமடைய செய்துள்ள தோடு மற்றும் பாதிப்படையச் செய்துள்ளது என்று சுட்டிக்காட்டினார். பின்னர் சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் அதை 'வெளியேற்றத்தின் கொள்கை' என்று குறிப்பிட்டதோடு, அப்படி ஒரு சட்டக் கோட்பாடு உள்ளதா என்று நீதிபதி கேட்டார். அதற்கு சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் பதிலளித்தது, இது கடமைகளை நீக்குவதைப் பரிந்துரைப்பதற்கான ஒரு உருவகச் சொல் என்றும், கடிதங்களின் தவறான வரிசை எண்கள் உள்ளடக்கத்தின் பாரதூரத்தை பொலிஸ் மா அதிபர் புரிந்து கொள்ளவில்லை என்றும் கூறினார்.

பெயர்கள், கடவுச்சீட்டு இலக்கங்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் போன்றவற்றின் மூலம் நிலந்த ஜயவர்தன உயர் அதிகாரிகளை எச்சரித்ததாக சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் அவர்கள் நீதிமன்றத்தில் தெரிவித்தார். நிலந்த ஜயவர்தனவால் வழங்கப்பட்ட அந்த ஆவணத்தின் பக்க இலக்கம் *42* இல், மத தீவிரவாதத்திற்கு துணை போன *42* நபர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியல் உள்ளது. மற்றொரு சந்தர்ப்பத்தில், *2019* ஜனவரி *31*ம் தினத்தன்று, தேசிய தவ்ஹீத் ஜமாத் மற்றும் ஜமாத்-இ-இஸ்லாமி ஆகிய இரண்டிலும் உறுப்பினர்களாக இருந்த அல்-கய்தா போன்ற மத தீவிரவாத அமைப்புகளுக்கு துணை போன *129* நபர்களின் பெயர்கள் மற்றும் பிற விபரங்கள் அடங்கிய கடிதம் பிரதி பொலிஸ் மா அதிபர் செனவிரத்னவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மொத்தத்தில், *97* அறிக்கைகள் பொலிஸ் மா அதிபருக்கும், *11* அறிக்கைகள் பாதுகாப்புச் செயலாளருக்கும் *(SoD)* சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இச் சம்பவங்கள் தற்செயலாகவோ அல்லது தனிமையிலோ நிகழவில்லை என்பதை அவர் எடுத்துக்காட்டியதுடன், மாறாக, அவை ஆவணங்கள் தொடரின்

ஒரு பகுதியாகவே இருந்தது என்பதை சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் அவர்கள் குறிப்பிட்டார்.

*2019* ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் *20* ஆம் திகதி பாதுகாப்புச் செயலாளருக்கும் *(SoD)*பொலிஸ் மா அதிபர் *(IGP)* மற்றும் பிரதி பொலிஸ் மா அதிபர் *(SDIG)*- குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு *(CID)*நிலந்த ஜயவர்தன அனுப்பிய *WhatsApp* ஸ்கிரீன் ஷாட்களை சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் *(SDSG)* குறிப்பிட்டுக் காட்டினார். மாலை *4.43* மணியளவில் பொலிஸ் மா அதிபருக்கு ஒரு செய்தி அனுப்பப்பட்டுள்ளது. *2019* ஏப்ரல் *18* திகதியிட்ட பாதுகாப்புச் செயலாளரின் *(SoD)* சத்திய கடதாசியினால் இது மேலும் ஆதாரத்துடன் நிறுவப்பட்டு /உறுதிப்படுத்தப்பட்டது. அதே செய்தி மாலை *6.02* மணியளவில் பாதுகாப்புச் செயலாளருக்கும் *(SoD)* அனுப்பப்பட்டுள்ளது. பொலிஸ் மா அதிபர் *(IGP)*, 'செய்தி பெறப்பட்டது' என்று பதிலளித்தார், இவ்வாறு உடனடித் தாக்குதல் பற்றிய தகவலைப் பெற்றவுடன்,இத்தகைய நெருக்கடியான சூழ்நிலையில் ஒரு பகுத்தறிவு மற்றும் பொறுப்புள்ள அதிகாரத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் நடத்தை இதுதானா என்று மாண்புமிகு நீதிமன்றத்திடமிருந்து சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் அவர்கள் கேள்வி எழுப்பினார்.நிலந்த ஜயவர்தன பிரதி பொலிஸ் மா அதிபருக்கும் *(SDIG)* செய்தியை அனுப்பியுள்ளார். அவரும் *2019* ஆம் ஆண்டு ஏப்ரல் *20* ஆம் திகதி மாலை *5* மணியளவில் பாதுகாப்புச் செயலாளருக்கு *(SoD)* அழைப்பைப் ஏற்படுத்தி குறித்த விடய்த்தை பின்தொடர்ந்துள்ளார். முரண்பாடான நிலைப்பாடுகளுடன் பாதுகாப்புச் செயலாளரால் *(SoD)* வழங்கப்பட்ட மூன்று சத்திய கடதாசிகள் இருப்பதாகக் சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் அவர்கள் நீதிபதிகளிடம் குறிப்பிட்டார். ஒரு சத்திய கடதாசியில், தனக்கு அப்படியொரு செய்தி வரவில்லை என்று பாதுகாப்புச் செயலாளர் *(SoD)* கூறியுள்ளார்.

பின்னர் நீதிபதி, தகவல் தெரிவிக்கப்படாதது தொடர்பான பாதுகாப்புச் செயலாளரின் *(SoD)* அறிக்கையானது ஆரம்ப தகவல் அல்லது சம்பவங்களின் வளர்ச்சியைக் குறிக்கிறதா என்று கேட்டார். அதற்கு சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் அவர்கள், பாதுகாப்புச் செயலாளருக்கு *(SoD)* அனுபப்பட்ட அனைத்து கடிதங்களையும் மேற்கோள் காட்டிய பிறகு, "*WhatsApp* செய்தியின் உள்ளீட்டை விட வேறு ஏதேனும் சிறந்த அறிவிப்பு ஒன்றை ஒருவர் பெற முடியுமா" என்று பதிலளித்தார். "செய்தி பெறப்பட்டது" மற்றும் "டிஐஜியுடன் இந்த விடயத்தைப் பற்றி கலந்துரையாடினேன்" (ஏப்ரல் *21* தாக்குதல் தொடர்பான பாதுகாப்புச் செயலாளரால் *(SoD)* வழங்கப்பட்ட சத்திய கடதாசியின்படி) என்று கூறுவது நியாயமான போதுமான நடவடிக்கையல்ல என்று சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் அவர்கள் தெரிவித்தார். மேலும், அனைத்து வி.வி.ஐ.பி.க்களுக்கும் அறிவிக்கும்/எச்சரிக்கை செய்த பிரியலால் தசநாயக்கவின் செயல் ஒட்டுமொத்த சமூகத்தைப் பாதுகாக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். கட்டுவாப்பிட்டிய கிறிஸ்தவ தேவாலயத்தில் குண்டுதாரி கனமான பையை எடுத்துச் சென்ற சம்பவத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில், "பயனப்பொதிகளை பரிசோதிப்பது போன்ற எளிமையான நடவடிக்கையை மேற்கொண்டிருக்கலாம்" என்று சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் அவர்கள் கூறினார்.

சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் அவர்கள், நிலந்த ஜயவர்தன அதன் மீது செயல்படும் *primus inter pares* (சமநிலையாளரில் முதன்மையானவர்) என்று கூறினார். இந்தத் தகவல்களைப் பல மூலங்கள் ஊடாகப் பரப்ப முடியும் என்றும்,ஏனையவர்களும் அவ்வாறு செய்திருக்க முடியும் என்ற போதிலும் நிலந்த ஜயவர்தன தான் அதனை சேகரித்தார் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தாக்குதல்களுக்குப் பிறகு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்று நீதிபதி எழுப்பிய கேள்விக்கு, பயங்கரவாதப் புலனாய்வுப்

பிரிவின் (டிஐடி) பணிப்பாளரிடம் ஏப்ரல் 24 ஆம் திகதியிட்ட ஆவணத்தை சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் குறிப்பிட்டு காட்டினார். பொலிஸ் மா அதிபர் (IGP) தவறு இழைத்ததாக பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவின் (TID) கண்டறிந்துள்ளது என சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் அவர்கள் கூறினார். நிலந்த ஜயவர்தன மேற்கொண்ட நடவடிக்கைகளுடன் ஒப்பிடுகையில், பாதுகாப்புச் செயலாளர் மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகிய இருவராலும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். வழக்கு அதே திகதியில் மதியம் 1.00 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.[91]

2022 ஒக்டோபர் 5ஆம் திகதியன்று, உயர் நீதிமன்றம் மூன்று வாரங்களுக்குள் மனுக்கள் மீதான எழுத்துப்பூர்வ சமர்ப்பிப்புகளை இரு தரப்பினரும் தாக்கல் செய்யு வேண்டும் என்று உத்தரவிட்டது. குண்டுத் தாக்குதலில் தனது இரண்டு பிள்ளைகளை இழந்த தந்தையான நந்தன சிறிமான்ன, வர்த்தகர் ஜனாத் விதானகே, சரத் இத்தமல்கொட உள்ளிட்ட மூன்று கத்தோலிக்க மதகுருமார்கள் மற்றும் ஷங்ரிலா குண்டுத் தாக்குதலால் பாதிக்கப்பட்ட சட்டத்தரணி மொதித ஏக்கநாயக்க மற்றும் பலர் இந்த மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சரவை மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் குறித்த மனுக்களில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர். முஸ்லிம் தீவிரவாதிகள் குழுவினால் பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்படுவதாக உளவுத்துறை தகவல்கள் கிடைத்திருந்தும், உயிர்த்த ஞாயிறு அன்று இடம்பெற்ற தாக்குதலைத் தடுக்க பிரதிவாதிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என மனுக்களில் கூறப்பட்டுள்ளது. எனவே, இவ் விடயத்தில் அலட்சியம் காட்டிய

அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும் என மனுவில் கோரப்பட்டுள்ளது.[92]

சட்டமா அதிபர் திணைக்களத்திற்காக சிரேஷ்ட உதவி சொலிசிட்டர் ஜெனரல் *(SASG)* ஆஜராகி, சட்டத்திற்குப் புறம்பான விடுப்பு மற்றும் அரச பொறுப்பு ஆகியவற்றின் அடிப்படையில் அவரின் சமர்ப்பனங்களைச் செய்தார். பொலிஸ் மா அதிபர் *(IGP)* மூவரடங்கிய குழுவிற்கு அனுப்பிய கடிதத்தை அவர் இங்கு குறிப்பிட்டுள்ளார். மூன்று பேர் கொண்ட குழு குறித்த திருத்தம் முதலில் 'பாராளுமன்றத் தெரிவுக்குழு' என்று குறிப்பிடப்பட்ட ஆவணத்தில் செய்யப்பட்டதாக சிரேஷ்ட உதவி சொலிசிட்டர் ஜெனரல் *(SASG)* குறிப்பிட்டார். முந்தைய திகதியில் எழுப்பப்பட்ட நீதிபதி அலுவிஹாரேவின் கேள்வியை சிரேஷ்ட உதவி சொலிசிட்டர் ஜெனரல் *(SASG)* குறிப்பிட்டார்.பிற சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் *(SDIG)* பொலிஸ் மா அதிபருக்கு கடிதம் அனுப்பியிருந்தார்களா என்ற கேள்வி பிரியலால் தசநாயக்கவின் கடிதத்திற்கு மேலதிகமாக இருந்தது. இக் கேள்வியைக் குறிப்பிடும் வகையில், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் *(SDIG),* நந்தன முனசிங்கவினால், *2019* ஏப்ரல் *10*ம் திகதி மற்றும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் *(SDIG)* விக்கிரமசிங்கவினால், *2019* ஏப்ரல் *11* திகதியிட்ட பொலிஸ் மா அதிபர்க்கு *(IGP)* அனுப்பிய கடிதங்கள் இணைக்கப்பட்ட மூவரடங்கிய குழுவிற்கு அனுப்பப்பட்ட ஆவணத்தை சிரேஷ்ட உதவி சொலிசிட்டர் ஜெனரல் *(SASG)* குறிப்பிட்டார்.[93]

பின்னர், சிரேஷ்ட உதவி சொலிசிட்டர் ஜெனரல் அவர்கள் *(SASG)* சட்ட விரோதமான புறக்கணிப்பின் சட்டரீதியான பாதிப்புகள் தொடர்பான சமர்ப்பிப்புகளைச் செய்தார். அதற்காக, ஆர்தர் லீவன்ஸ் எழுதிய *'A Causation Approach to Criminal Omissions'* என்ற கலிபோர்னியா சட்ட மதிப்பாய்வின் *571, 572, 573, 574, 575* மற்றும் *576-* பக்கங்களில் இருந்து எடுக்கப்பட்ட பொழிப்புச் சுருக்கங்களைக் குறிப்பிட்டார்.

குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் பிரிவு 107 ஐக் குறிப்பிட்டு, சிரேஷ்ட உதவி சொலிசிட்டர் ஜெனரல் அவர்கள் (SASG) குற்றத்தை 'இடைச்செருகும்' பொறுப்பு காவல்துறைக்கு உள்ளது என்று வாதித்தார். அப்போது நீதிபதி நவாஸ், அடிப்படை உரிமைகள் மனுக்களில் குற்றவியல் சட்டக் கோட்பாடுகள் சேர்க்கப்பட வேண்டுமா என்று கேள்வி எழுப்பினார். சிரேஷ்ட உதவி சொலிசிட்டர் ஜெனரல் (SASG) அவர்கள் இச் செயல்கள் குற்றவியல் பொறுப்பை ஈர்க்கின்றன, எனவே இந்த தரநிலைகள் அடிப்படை உரிமைகள் மனுக்களில் பயன்படுத்தப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார். அப்போது, இதற்கு முன்மாதிரிகள் ஏதேனும் உள்ளதா என்று நீதிபதி கேட்டார். அடிப்படை உரிமைகள் மனுவில் கடமைகளை தவறவிட்டதை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று சிரேஷ்ட உதவி சொலிசிட்டர் ஜெனரல் (SASG) பதிலளித்தார். திரு ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் திரு பூஜித் ஜயசுந்தர ஆகியோர் தொடர்பில் அவர் சமர்ப்பித்த குற்றத்தின் பாரதூரத்தை ஏனைய பிரதிவாதிகளுக்கும் வழங்குமாறு நீதிபதி கேட்டுக் கொண்டார். அதற்கு சிரேஷ்ட உதவி சொலிசிட்டர் ஜெனரல் (SASG), 'சான்றுப் பெரும்பான்மை' என்ற கொள்கையைப் பயன்படுத்த வேண்டும் என்று பதிலளித்தார்.[94]

அரசே பாதிக்கப்பட்டருக்கும் போது தனிநபர்கள் புரிந்த தவறுகளுக்கு அரசே பொறுப்பேற்க முடியுமா என்ற கேள்வியை சிரேஷ்ட உதவி சொலிசிட்டர் ஜெனரல் முன்வைத்தார். மேலும், அரசு குற்றவாளி என்று கண்டறியப்பட்டால், அது உள்ளூர் அரங்கில் மட்டுமல்ல, சர்வதேச அரங்கிலும் அரசு புறக்கணிக்கப்பட்டு களங்கப்படுத்தப்படும் என்று கேள்வி எழுப்பினார். இவ் விடயம் தொடர்பில் அரசாங்கம் அவதானத்துடன் செயற்பட்டுள்ளது என்பதை நிரூபிக்கும் வகையில், தாக்குதல்கள் இடம்பெற்று ஒரு நாளுக்குப் பின்னர், ஏப்ரல் 22ஆம் திகதி அமைச்சரவையில் ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதாக உதய ரஞ்சன் சேனவிரத்னவின் சத்தியக் கடதாசியில்

குறிப்பிட்டிருப்பதாக சிரேஷ்ட உதவி சொலிசிட்டர் ஜெனரல் *(SASG)*தெரிவித்தார்.[95]

திரு. நிலந்த ஜயவர்தன, தகவல் தருபவர்களை உருவாக்கி அவர்கள் மூலம் பெறுமதியான தகவல்களைப் பெற்றுக் கொள்வதன் மூலம் தனது தனது பொறுப்பை நிறைவேற்றியிருந்தார். பிரியலால் தசநாயக்கவும் தனக்கு வழங்கப்பட்ட கடமையை செய்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இறுதியாக, இப் படுகொலையால் தான் மிகவும் கவலையடைந்துள்ளதாகவும், நாட்டில் துயரமடைந்து பாதிக்கப்பட்ட நபர்களை தாம் பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அப்போது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபா ஆஜரானார். பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்பதால் ஜனாதிபதிக்கு கட்டளைச் சங்கிலி பொருந்தாது அவர் உறுதியாகக் கூறினார். விரிவான எழுத்துப்பூர்வ சமர்ப்பணத்தை சமர்ப்பிக்குமாறு நீதிபதி கேட்டுக் கொண்டார். *46* வது பிரதிவாதியான ரவீந்திர என்பவர் தாக்குதல்களின் போது நாட்டிற்கு வெளியே இருந்ததாக குற்றப் புலனாய்வுப் திணைக்களத்தின் சிரேஷ்ட பிரதி பொலிஸ் பரிசோதகர் *(SDIG)* கூறினார். அவர் இன்டர்போல் உடனான மாநாட்டில் கலந்து கொண்டார். மேலும், புலமைச் சொத்துக்கள் தொடர்பான விடயங்களை குற்றப் புலனாய்வுப் திணைக்களம் கையாள்கிறது. மாவனல்லை புத்தர் சிலை உடைப்பு சம்பவம் தொடர்பில் சஹ்ரான் பற்றிய தகவல்களை முதலில் வெளியிட்டது குற்றப் புலனாய்வுப் திணைக்களம் தான் என மேலும் தெரிவிக்கப்பட்டது. ஏப்ரல் *9* ஆம் திகதி அனுப்பப்பட்ட கடிதத்தைக் குறிப்பிட்டு, அது குற்றப் புலனாய்வுப் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு அனுப்பப்பட்டது என்றும், சிரேஷ்ட பிரதி பொலிஸ் பரிசோதகருக்கு அனுப்ப பட்டது அல்ல என்றும் அரச வழக்கறிஞர் வாதிட்டார்.[96]

47வது பிரதிவாதியான திரு. லத்தீப், திட்டமிடப்பட்ட குற்றங்கள் மற்றும் போதைப்பொருள் ஒழிப்பிற்க்கான பொலிஸ் விசேட அதிரடிப்படை (STF) கட்டளைத் தளபதி, நாட்டிற்கு வெளியே இருந்துள்ளதாகவும் அவர் ஏப்ரல் 1 முதல் 8 ஆம் திகதி வரை பிரான்ஸ் நாட்டுக்கு சென்றுள்ளார்.மேலும் ஏப்ரல் 17முதல் 20ம் திகதி வரை அவர் வேறு பணிக்கு நியமிக்கப்பட்டிருந்தார். மேலும், தாக்குதல் தொடர்பாக நிலந்த ஜயவர்தனவிடமிருந்து வாட்ஸ்அப் செய்தியை தான் பெறவில்லை என்றும் திரு.லத்தீப்பின் சத்தியக் கடதாசியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தாக்குதல்களுக்குப் பிறகு உடனடியாக, பொலிஸ் விசேட அதிரடிப்படைக்கு, வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களின்படி, தாக்குதல் நடத்தியவர்களின் குடியிருப்புகளை கண்டுபிடித்துள்ளார்கள். இந்திய உயர்ஸ்தானிகராலயத்திற்கு பொலிஸ் விசேட அதிரடிப்படை (STF) பாதுகாப்பு வழங்கியது, மேலும் பொலிஸ் விசேட அதிரடிப்படை (STF) வழங்கிய பாதுகாப்பின் காரணமாக உயர் ஸ்தானிகராலயம் தாக்கப்படவில்லை என்பது இன்னும் நிரூபிக்கப்படவில்லை. 53ஆவது பிரதிவாதியான மத்திய மற்றும் ஊவா மாகாணத்தின் சிரேஷ்ட பிரதி பொலிஸ் பரிசோதகர் (SDIG) திரு. விக்கிரமசிங்க தொடர்பில், ஏப்ரல் 4ஆம் திகதி முதல் 9ஆம் திகதி வரையில் அவருக்கு எந்தத் தகவலும் கிடைக்கவில்லையா என நீதிபதி வினவினார். அரச தரப்பு எதிர்மறையாக பதிலளித்தது.[97]

2023 ஆம் ஆண்டு ஜனவரி 12 ஆம் திகதி, மனுதாரரர்கள் தாக்கல் செய்த அனைத்து மனுக்களுக்கும் உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. அடிப்படை உரிமைகள் மனுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதிவாதிகள், உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தடுக்கத் தவறியதாகவும், உடனிகழ்தகு தாக்குதல் பற்றிய நம்பகமான தகவல்கள் இருந்தபோதிலும், மனுதாரரர்களின் அடிப்படை உரிமைகளை மீறுயுள்ளதாகவும் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

முன்னாள் ஜனாதிபதி **மைத்திரிபால சிறிசேனவுக்கு 100 மில்லியன் ரூபாய்** நட்டஈடு வழங்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. முன்னாள் பொலிஸ் மா அதிபர் **பூஜித் ஜயசுந்தர** மற்றும் முன்னாள் அரச புலனாய்வுப் பிரிவின் தலைவர் **நிலந்த ஜயவர்தன** ஆகியோருக்கு **தலா 75 மில்லியன் ரூபாவும்**, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் **ஹேமசிறி பெர்னாண்டோவுக்கு 50 மில்லியன் ரூபாவும்** நட்டஈடாக வழங்கும் படி நீதிமன்றம் உத்தரவிட்டது. தேசிய புலனாய்வு சேவையின் முன்னாள் தலைவர் **சிசிர மெண்டிஸுக்கு 10 மில்லியன் ரூபா** நட்டஈடு வழங்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடாக 1 **மில்லியன்** ரூபாவை வழங்கும்படியும் நீதிமன்றம் **அரசுக்கு** உத்தரவிட்டது. இந் நிதி அனைத்தும் சேகரிக்கப்பட்டு 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்று உயர் நீதிமன்றம் மேலும் கூறியது. பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய இழப்பீடு வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டது. அத்துடன், **அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் நிலந்த ஜயவர்தனவுக்கு எதிராக 6 மாதங்களுக்குள் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது**.பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கான முன்னேற்றம் மற்றும் முன்னாள் அரச புலனாய்வுப் பிரிவின் தலைவர் நிலந்த ஜயவர்தனவுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அவதானித்து நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு சட்டமா அதிபருக்கு உத்தரவிடப்பட்டது. தீர்ப்புக்கு இணங்க அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளை reparations.gov.lk இல் காணலாம்.

## பிரிவு 5: ஹெஜாஸ் ஹிஸ்புல்லா மற்றும் ஏனையோருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கு HC 78/2021

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை நடத்திய குண்டுதாரிகளில் ஒருவருடன் தொடர்புடைய சேவ் தி பேர்ல்ஸ் தொண்டு நிறுவனத்துடன் தொடர்புகள் வைத்திருந்ததாக கூற்றம் சுமத்தப்பட்ட வழக்கறிஞர் ஹெஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு.

*2022* ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் *4* ஆம் திகதி, இவ் வழக்கில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பில் வமையாக ஆஜராகும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திருமதி லக்மினி கிரிஹாகம மற்றும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திரு சுதர்ஷன டி சில்வா ஆகியோர் ஆஜராகவில்லை. இதன்படி, சட்டமா அதிபர் திணைக்களம் சார்பில் ஆஜரான அரச சட்டத்தரணி திருமதி நிமேஷா டி அல்விஸ், மேலதிக திகதியொன்றை நீதிமன்றத்திடம் கோரினார். எனவே, இவ் வழக்கு *2022* ஆம் ஆண்டு நவம்பர் *25* ஆம் திகதி மேலதிக விசாரணைக்காக அழைக்கப்பட்டது. மேலும், இவ் வழக்கு விசாரணையின் போது, கோட்டை நீதவான் அலுவலகத்தில் அரசு தரப்பு சாட்சியாளர் இல. *1* மற்றும் *2* மூலம் இரகசிய வாக்குமூலங்கள் அளிக்கப்பட்டிருப்பதுடன் அது ஊடகங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளன. எனவே, குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் வழங்கப்பட்ட வாக்குமூலங்கள் அடங்கிய முதல் தகவல்களை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. [98]

*2023* ஜனவரி *23* திகதியன்று, *2*வது குற்றவாளியின் வழக்கறிஞர், அரசு தரப்பு முதல் சாட்சியான மொஹமட் நாசர் மொஹமட் மாலிக் இனை மேலும் குறுக்கு விசாரணை செய்தார். பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சுதராஷன டி சில்வாவினால் அவர் மீண்டும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். மேலதிகமாக, நீதிபதியினால் அரசு தரப்பு

சாட்சிகள் இல. 2, இல. 46, இல. 51, மற்றும் இல. 52.க்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.[99]

அரசு தரப்பு சாட்சி இல. 2, 19 வயது இளைஞன், 2023 மார்ச் 24 திகதியன்று தனது சாட்சியத்தை முடித்துக்கொண்டார். மேலும், அன்று குறித்த சாட்சியாளர் தாம் ரமழானுக்காக நோன்பு இருப்பதாகவும், தான் தற்போது சௌகரியமற்ற நிலையில் இருப்பதாகவும் நீதிமன்றத்திடம் தெரிவித்ததால் குறுக்கு விசாரணை மார்ச் 27ம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது. அரசு தரப்பு சாட்சி இல. 46 தொடர்பான தகவல்கள் திருத்தப்பட்டு, அடுத்த நாள் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கோரப்பட்டது.[100] 2023 மார்ச் 27ம் திகதியன்று 2வது சாட்சியின் குறுக்கு விசாரணை 1வது குற்றவாளியின் வழக்கறிஞரால் நடத்தப்பட்டது.[101]

2023 மே 12 ம் திகதியன்று, 2வது சாட்சி நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. 2வது குற்றவாளி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்ததால் அவரும் ஆஜராகவில்லை. நீதிமன்ற நடவடிக்கைகளை தொடர முடியாததால், மேலதிக விசாரணைக்காக **ஜூலை** 14 ஆம் திகதிக்கு திகதி மாற்றப்பட்டது.[102]

## பிரிவு 6: 3 மௌலவிமாருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கு- HC 188/2021

புத்தளம் மத்ரஸா பாடசாலை ஒன்றில் தீவிரவாதத்தை பரப்பியதாக கூறப்படும் சம்பவம் தொடர்பான வழக்கு இதுவாகும்.

2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் திகதி, குற்றம் சாட்டப்பட்டவர்கள் சார்பாக ஆஜரான சட்டத்தரணிகள், குற்றம் சாட்டப்பட்டவர் சார்பாக ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன அவர்கள் மற்றுமோறு நீதிமன்றத்தில் ஆஜராகியருப்பதால், அவரால் அன்றைய தினத்தில் இன் நீதிமன்றத்தின் முன்னிலையாக முடியாமல் இருப்பதால், மறு திகதியென்றுக்கு மாற்றித் தரும் படி நீதிமன்றத்திடம் கோரினர். அரசு தரப்பு சாட்சி இல. 13 மற்றும் 14

ஆஜராகி இருந்தனர். வழக்கு முன்-விளக்கத்திற்காக *2023* மார்ச் *17* ஆம் திகதிக்கு மாற்றப்பட்டது. [103]

*2023* ஜூன் *5* திகதியன்று, அரசு தரப்பு சாட்சி இல. *13* மற்றும் *14* க்கு அடுத்த திகதியில் அதாவது *2023* **ஜூலை** *10***ம்** திகதி ஆஜராகுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. [104]

## பிரிவு *7:* முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிரான தனிப்பட்ட முறைப்பாடு

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக *2022* ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் *16* ஆம் திகதி நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட தனிப்பட்ட முறைப்பாடு தொடர்பிலான வழக்கு இதுவாகும். [105] சஹ்ரான் ஹாஷிம் மற்றும் அவரது ஆதரவாளர்களை கைது செய்ய முப்படைகள் மற்றும்/அல்லது பொலிஸாருக்கு வழிகாட்டத் தவறியமை மற்றும்/அல்லது கண்காணிப்பை மேற்கொள்ளத் தவறியமை மற்றும்/அல்லது உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் போது ஏற்படும் பாதிப்புகள் மற்றும் இறப்புகளைத் தடுக்கத் தவறியதாக பாதுகாப்பு அமைச்சராக தனது சட்டப்பூர்வமான கடமைகளை நிறைவேற்றத் தவறிவிட்டதாக வழக்காளி குற்றம் சாட்டியுள்ளார். எனவே, கவனக்குறைவால் மரணத்தை ஏற்படுத்தியதற்காக மற்றும்/அல்லது கடுமையான காயத்தை ஏற்படுத்தியதற்காக தண்டனைச் சட்ட விதித் தொகுப்பின் *298* மற்றும் *329* பிரிவுகளின் கீழ் குற்றம் சாட்டப்பட்டவரை குற்றவாளியாக நிறுத்த நீதவான் நீதிமன்றத்தில் வழக்காளியினால் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. [106] நீதவான் நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்டவருக்கு *2022* ஆம் ஆண்டு செப்டம்பர் *16* ஆம் தினத்தன்று அழைப்பாணை அனுப்பியது.

*2022* ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் *14* ஆம் திகதி, ரிட் *354/22* இலக்க வழக்குடன் இவ் வழக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் வழங்கிய உத்தரவு, மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவாளரால் கோட்டை நீதவான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது. மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவை பரிசீலித்த கோட்டை நீதவான், அன்றைய தினம் உத்தரவு வழங்கப்பட மாட்டாது என தரப்பினருக்கு அறிவித்துள்ளார். இவ் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் கோட்டை நீதவான் நீதிமன்றம் முன்னிலையில் பிரசன்னமாகியிருந்தார். அதன்படி, இவ் வழக்கு *2023* ஜனவரி *27*ஆம் திகதி அழைக்கப்பட்டது.[107]

*2023* ஜனவரி *27* திகதியன்று, குற்றம் சாட்டப்பட்டவர் கூண்டுக்குள் நுழையவில்லை என்று புகார்தாரரின் ஜனாதிபதி வழக்கறிஞர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.[108] பின்னர் இரு வழக்கறிஞர்களும் இவ் விடயம் தொடர்பாக வாய்வழி சமர்ப்பிப்புகளைச் செய்தனர், மேலும் அழைப்பாணை அனுப்பிய பின்னர் அந்த நபர் குற்றம் சாட்டப்பட்டவராக மாறி கூண்டுக்குள் செல்ல வேண்டும் என்று நீதிபதி முடிவு செய்தார். மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு இடையிலான வழக்கு முடிவடையாததால், இவ் வழக்கு மார்ச் *17* ஆம் திகதிக்கு தள்ளிவைப்பட்டது.[109] *2023* **மார்ச்** *17* **திகதியன்று**, **ரிட் வழக்கின் உத்தரவு கிடைக்கும் வரை நடவடிக்கைகளை இடைநிறுத்த நீதிமன்றம் முடிவு செய்தது**.[110]

## பிரிவு *8:* முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் வழக்கு - *WRIT 354/22*

*2022* ஆம் ஆண்டு செப்டெம்பர் *29* ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுவொன்றை

தாக்கல் செய்து, 23084/22 ஆம் இலக்க நீதவான் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட உத்தரவின்படி, தமக்கு 2022 ஒக்டோபர் 14 ஆம் திகதி கோட்டை நீதவான் நீதிமன்றம் முன்னிலையில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டி இருப்பது, சட்டவிரோதமானது எனவும், செல்லாதது எனவும் மற்றும் சட்டரீதியான எந்த விளைவையும் ஏற்படுத்தாது என்பதையும் தெரிவித்துள்ளார். 2022 செப்டெம்பர் 29 திகதி தாக்கல் செய்யப்பட்ட மனுவில், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் செர்டியோராரி உத்தரவு, தடையீட்டெழுத்தாணை உத்தரவு மற்றும் மனுதாரரை கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்று 2022 செப்டம்பர் 16 ஆம் திகதிய அழைப்பாணையை நிறைவேற்றுவதற்கு இடைக்காலத் தடை உத்தரவு விதித்தல் ஆகியவை பிறப்பிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்திடம் கோரியிருந்தார். கோட்டை நீதவான் நீதிமன்றத்தின் இலக்கம் 23084/22ஐக் கொண்ட மேற்படி வழக்கின் மேலதிக நடவடிக்கைகளுக்கு இடைக்காலத் தடை விதிக்குமாறும் மனுதாரர் நீதிமன்றத்திடம் கோரியிருந்தார்.

2022 ஒக்டோபர் 11 திகதியன்று, சமூக சமய நடுநிலையம் இவ் வழக்கில் இடைபுகும் தரப்பாக ஆஜராக வழக்கறிஞர்கள் மூலம் நீதிமன்றத்தின் அனுமதியைக் கோரியது. இதற்கு எந்த தரப்பினரும் எதிர்ப்பு தெரிவிக்காததால், நீதிமன்றம் அனுமதி வழங்கியது. அன்றைய தினம் மனுதாரர் சார்பில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. [111] மனுதாரர் மூன்று முக்கிய அம்சங்களின் மூலம் தனது சமர்ப்பனங்களைச் செய் துள்ளார். அங்கு, மனுதாரருக்கு எதிராக முதல்தோற்ற வழக்குத் தாக்கல் செய்வதற்கு நேரடியான ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆதாரங்கள் எதுவும் இல்லை என்று சுட்டிக்காட்டப்பட்டது. [112] மேலும், மனுதாரருக்கு அழைப்பாணை அனுப்புமாறு கோட்டை நீதவான் நீதிமன்றம் வழங்கிய உத்தரவில், மனுதாரருக்கு தண்டனை கொவைச் சட்டத்தின் எந்தப் பிரிவுகள் பொருந்தும் என்பது குறிப்பிடப்படவில்லை என்றும்

சுட்டிக்காட்டப்பட்டது. ஜனக் டி சில்வாவின் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் மனுதாரருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாது எனவும் மனுதாரரர் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வரும் பின்னணியில் மனுதாரரரை குற்றவாளி என்று குறிப்பிடுவதும் தவறு என்று மனுதாரரர் சார்பில் உண்மைகள் முன்வைக்கப்பட்டது.[113] சில வழக்கு முடிவுகளை மேற்கோள் காட்டி மனுதாரரர் தனது வாதங்களை முன்வைத்தார். விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதி "அரச அதிகாரி" என்ற பதத்தின் கீழ் வரமாட்டார் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது. 2022 ஒக்டோபர் 12 ஆம் திகதி, பிரதிவாதிகள் சார்பாக உண்மைகளை முன்வைப்பதற்காக வழக்கு அழைக்கப்பட்டது.[114]

2022 ஒக்டோபர் 12 திகதியன்று, பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள் தங்கள் சமர்ப்பிப்புகளை முன்வைத்தனர், மேலும் மனுதாரரர் சார்பில் ஆஜரான வழக்கறிஞரும் தங்கள் எதிர் சமர்ப்பிப்புகளை முன்வைத்தனர்.[115] மூன்றாவது மற்றும் நான்காவது பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள், இத் தாக்குதல் குறித்து மனுதாரரர் அறிந்திருந்தாகவும், அவரது பொறுப்பு நவம்பர் 2016 வரை நீடிப்பதாகவும் சுட்டிக்காட்டினார். மேலும், நீதவான் நீதிமன்ற வழக்கு இல. 23084/22 இல், நீதிபதி தனது உத்தரவை ஜனக் டி சில்வா ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளுக்கு அமைய மாத்திரமல்ல நீதிபதியின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையிலும் தான் வழங்கியிருக்கிரார் என்றும் [116]. ஜனக் டி சில்வா ஆணைக்குழுவை மனுதாரரே நியமித்ததாகவும், சாட்சிகள் அழைக்கப்பட்டு சாட்சியங்கள் முன்வைக்கப்பட்டதாகவும், இவ் வழக்கில் மனுதாரருக்கு எதிராக சாட்சியங்கள் கோரப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.[117] மேலும், மூன்றாவது மற்றும் நான்காவது பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் மேலதிக சமர்ப்பணங்களை

முன்வைத்ததுடன், மனுதாரரின் நற்பெயருக்கும் நீதியை நிறைவேற்றுவதற்கும் இடையில் உள்ள வசதி சமநிலை குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. [118] உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் மனுதாரருக்கு எதிரான அடிப்படை உரிமைகள் வழக்கு தொடர்பான தீர்மானத்தை ஏழு பேர் கொண்ட உயர் நீதிமன்ற மன்றாயம் வழங்க உள்ளதாக மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத்திற்கு அறிவித்தார்.[119] இடைபுகும் தரப்பாக, இவ் வழக்கில் தொடர்புடைய சமூக சமய நடுநிலையத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வழக்கறிஞர், அரசியலமைப்பின் விதிகளை மேற்கோள் காட்டி ரிட் மனுவுக்கு எதிராக தனது சமர்ப்பிப்புகளை முன்வைத்தார். மேலே குறிப்பிடப்பட்டுள்ள நீதவான் நீதிமன்ற வழக்கை இடைநிறுத்துவதற்கான இடைக்கால உத்தரவை வழங்குவதா இல்லையா என்பது குறித்த முடிவு *2022* ஒக்டோபர் *14* ஆம் திகதி வழங்க திட்டமிடப்பட்டது.[120]

*2022* ஒக்டோபர் *14* திகதியன்று, மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது (சம்பந்தப்பட்ட உத்தரவின் சில பகுதிகள் நீதிபதியால் வாசிக்கப்பட்டது). இவ் உத்தரவில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் வழக்குகளும் குறிப்பிடப்பட்டன.[121] உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து *(14*ஆம் திகதி*) 10* வாரங்களுக்குள் மனுதாரர் திரு மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக பாரபட்சமான உத்தரவுகளை பிறப்பிக்க வேண்டாம் என மேன்முறையீட்டு நீதிமன்றம், கோட்டை நீதவானுக்கு உத்தரவிட்டது[122] கோட்டை நீதவான் நீதிமன்றத்தினால் விடுக்கப்பட்ட அழைப்பாணையை இரத்து செய்யுமாறு திரு. சிறிசேன கோரிய இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை. நீதிமன்றத்தின் முன் பல சட்ட வாதங்கள் எழுந்துள்ளதால், அவை தீர்க்கப்பட வேண்டும் என்றும். *2022* ஆம் ஆண்டு நவம்பர் மாதம் *30* ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் இவ் வழக்கு

தொடர்பான எழுத்துமூல சமர்ப்பணங்களை தாக்கல் செய்யுமாறு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் உத்தரவு விதித்தனர். மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்த போது, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் நீதிமன்றத்தில் பிரசன்னமாகியிருந்தார். இவ் வழக்கு 2022 டிசம்பர் 6 திகதியன்று அழைக்கப்பட்டது.[123]

2022 டிசம்பர் 6 திகதியன்று, மனுதாரருக்கான கற்றறிந்த ஜனாதிபதி வழக்கறிஞர் மற்றும் பிரதிவாதியின் கற்றறிந்த ஜனாதிபதி வழக்கறிஞர் ஆகியோர் எழுத்துமூல சமர்ப்பிப்புகளை தாக்கல் செய்ய மேலும் கால அவகாசம் கோரினர். அனைத்து தரப்பினரும் இவ் விடயத்தை வாதத்திற்காக மறுசீரமைக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். 2023 ஜனவரி 17ஆம் திகதி அனைத்துத் தரப்பினராலும் செய்யப்பட்ட இச் சமர்ப்பிப்புகள் மூலம் தனிப்பட்ட முறையீட்டில் அழைப்பாணைகளை வழங்குவதற்கான நீதவான் நீதிபதியின் முடிவெடுக்கும் அதிகாரம் தொடர்பில் குறிப்பாக கவனம் செலுத்தப்பட்டது

2023 ஜனவரி 31திகதியன்று, 301ம் இலக்க நீதிமன்றத்தில் குறிப்பிட்ட வழக்கு மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் மேன்மைமிகு நீதிபதியவர்கள் முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டது. மூன்றாவது பிரதிவாதி இவ் வழக்கை பிரிவு நீதாயத்திற்கு அனுப்புவதற்கான பிரேரணையை ஆதரிக்க வேண்டும் என்றதால், 2023 பெப்ரவரி 9 திகதியன்று, வழக்கை ஆதரிக்க மேலும் ஒரு திகதி வழங்கப்பட்டது.[124]

2023 பெப்ரவரி 24ஆம் திகதி, இவ் விடயம் பிரிவு நீதாயத்தை கோரும் பிரேரணையை ஆதரிக்க 3வது பிரதிவாதிக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இருப்பினும், அது இடம்பெறவில்லை, அதனால் 2023 மார்ச் 7ம் திகதிக்கு அது ஒத்திவைக்கப்பட்டது.[125] 2023 ஆம் ஆண்டு மார்ச்

*14* ஆம் திகதி, மாண்புமிகு மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள், முந்தைய தேதியில் சமர்ப்பிக்கப்பட்ட சமர்ப்பிப்புகளை பரிசீலித்து, பிரிவு நீதாயத்திற்க்கு முன் இவ் வழக்கை அழைப்பது தொடர்பான உரிய உத்தரவை வழங்கியது. இதன்படி, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஐந்து நீதிபதிகள் அடங்கிய அமர்வு முன்னிலையில் இவ் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மேலும், இவ் வழக்கின் தீர்ப்பு வழங்கப்படும் வரை, கோட்டை நீதவான் நீதிமன்றில் உள்ள வழக்கின் குற்றப்பத்திரிகைகள் மனுதாரருக்கு வழங்கப்பட மாட்டாது என்றும் உத்தரவிடப்பட்டது.[126]

மார்ச் *17* ஆம் திகதியன்று, *2023* **ஜூலை** *31* **மற்றும்** *2023* **ஆகஸ்ட்** *9* **மதியம்** *1.30* மணிக்கு மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் கொண்ட அமர்வு முன் வாதங்களை முனவைப்பதற்கான திகதி நிர்ணயிக்கப்பட்டது.[127]

## பிரிவு *9:* மாவனல்லை புத்தர் சிலை சேதப்படுத்தல் தொடர்பான

*2022* ஜூன் *17* திகதியன்று, இவ் விடயம் அழைக்கப்பட்டது.[128] இவ் வழக்கில் *16* பேர் குற்றவாளிகளாக இருப்பதுடன், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ் விவகாரத்தில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதிலிருந்து தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதற்கான தங்கள் நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள விருப்பம் தெரிவித்தனர்.[129] *8* மற்றும் *9*வது குற்றவாளிகள தவிர ஏனைய குற்றவாளிகள் தங்கள் குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டனர்.[130]

*2022* செப்டம்பர் *13* திகதியன்று, அந்தந்த குற்றச்சாட்டுகளை ஒப்புக்கொள்ளாத குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தொடர்பாக இவ்

வழக்கு அழைக்கப்பட்டது.[131] இந்த வழக்கு மதியம் 1.30 மணியளவில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதுடன் மற்றும் இரண்டு குற்றவாளிகளின் பெயர்களும் அழைக்கப்பட்டன, ஆனால் அவர்களை ஆஜர்படுத்துமாறு அறிவிக்கப்பட்ட போதிலும் அவர்கள் சிறைச்சாலை அதிகாரிகளால் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை.[132] அவர்களை வரும் நாட்களில் ஆஜர்படுத்தும்படி அதிகாரிகளுக்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. இதற்கு மூவர் அடங்கிய சிறப்பு நீதிமன்ற விளக்கம் மேற்கொள்ளப்பட மாட்டாது என்று தெரிவிக்கப்பட்டது, மேலும் இந்த வழக்கு மற்றுமொரு திகதிக்கு மாற்றப்பட்டது.[133]

2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9ஆம் திகதி முற்பகல் 11 மணியளவில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு 8ஆம் மற்றும் 9ஆம் குற்றவாளிகள் பஸ்ஸா சிறைச்சாலையில் இருந்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். ஆனால் விசாரணையின் போது 8 மற்றும் 9 வது குற்றவாளிகளுக்கு சட்டப்பூர்வ பிரதிநிதித்துவம் இருக்கவில்லை.[134] தங்களின் சட்டத்தரணிகளுக்கு முறையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதாகவும், சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாகவும் குற்றம் சுமத்தப்பட்டவர்கள் தெரிவித்தனர். அரச வழக்கறிஞர், வழக்குப் பொருள் மற்றும் ஆவணங்களில் உள்ள ஆவணத்தைத் திறந்து தேவையான நடவடிக்கைகளை எடுக்க நீதிமன்றத்திடம் அனுமதி கோரினார். அதற்கு நீதிபதி அனுமதி வழங்கினார்.[135] மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் அவர்கள், தனக்கு தேவையான அறிவுரைகள் வழங்கப்படாததால், இவ் விடயத்தை தொடர தன்னால் தயாராக முடியவில்லை என்று நீதிமன்றத்தில் தெரிவித்தார்.[136] நீதிமன்றத்தின் நேரம் மற்றும் வளங்களுக்கு இடையூறு விளைவித்ததற்காக கற்றறிந்த வழக்குரைஞர்களை நீதிமன்றம் கடுமையாக எச்சரித்தது.இது மீண்டும் நிகழக்கூடாது என்றும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் அடுத்த நாள்

சட்டப்பூர்வ பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் நீதிமன்றம் தரப்பினரை எச்சரித்தது. குற்றம் சாட்டப்பட்டவர்கள் அடுத்த விசாரணை திகதியில் விசாரணைக்கு நேரில் அல்லது ஸ்கைப் வசதி மூலம் ஆஜராக வேண்டும். அடுத்த திகதியில் இவ் விடயத்திற்கு முழுமையாக தயாராக வேண்டும் என்றும் தயாராக இல்லை என்றால் முறையாக நீதிமன்றத்திற்கு தெரிவிக்க வேண்டும் என்றும் குறித்த தரப்பினர்களுக்கு உத்தரவிடப்பட்டது.[137] ஜனவரி 10ம் திகதியன்று நீதிபதி அவர்கள் விடுமுறையில் இருந்ததால் வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.[138]

| |
|---|
| 2023 குற்றப்பத்திரிகையில் ஜனவரி 18ம் திகதியன்று, பிற்பகல் 2,00 மணிக்கு இவ் வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. 8வது மற்றும் 9வது குற்றவாளிகள் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் குற்றத்தை ஒப்புக்கொண்டனர். 8வது மற்றும் 9வது குற்றவாளிகளுக்கு 6 மாத இடைநீக்கம் செய்யப்பட்ட 7 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் தலா ரூ. 10,000 அபராதமும் விதிக்கப்பட்டது. |

இவ் வழக்கு அன்றுடன் முடிவுக்கு வந்தது.[139]

## பிரிவு 10: வனாதவில்லுவ பயிற்சி முகாம் மற்றும் வெடிபொருட்கள் தொடர்பான வழக்கு - புத்தளம் /TAB 107/2021

இவ் வழக்கு உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் சம்பந்தப்பட்ட வனாதவில்லுவையில் கண்டுபிடிக்கப்பட்ட பயிற்சி முகாம் மற்றும் வெடிபொருட்கள் தொடர்பானது.

2022 நவம்பர் 15 திகதியன்று, அரசு தரப்பில் ஆஜரான வழக்கறிஞர்கள், சாட்சிகள் இல. 12 மற்றும் 13 அரசு தரப்புக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டிருந்ததுடன் சாட்சி இலக்கம் 13 சாட்சியங்களுக்காக கடந்த முறை அழைக்கப்படாத போதிலும் அவர் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார். [140] இவ் விடயம் அழைக்கப்பட்டபோது, சாட்சி

இலக்கம் *12,* குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரியான டயஸ் பத்மசிறி விசாரணை, குறுக்கு விசாரணை மற்றும் மறு விசாரணைக்கு அழைக்கப்பட்டார். [141] அரச சட்டத்தரணி, எதிர்வாத தரப்பு சட்டத்தரணிகளால் முந்தைய திகதியில் கோரப்பட்ட ஆவணங்களின் மொழிபெயர்ப்புகள் கையளிக்கப்பட்டது. அரசு தரப்பின் சாட்சி இலக்கம் *01*க்கு முந்தைய தினத்தில் அழைப்பாணை விடுக்குமாறு கோரப்பட்டது, ஆனால் நுவரெலியா மேல் நீதிமன்றத்தில் சாட்சிக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், சாட்சியம் அளிக்க அவரை அழைப்பதில் சட்டத் தடைகள் உள்ளதால் அவரை தற்காலிகமாக விடுதலை செய்யுமாறு அரசு தரப்பு சட்டத்தரணிகள் நீதிமன்றத்திற்கு அறிவித்தனர்.[142]

*2022* நவம்பர் *16* திகதியன்று, அரசு தரப்பில் ஆஜரான அரச வழக்கறிஞர், வழக்கு விசாரணையின் சாட்சி இல. *23, 16, 63,* ஆகியோருக்கு *2023* ஜனவரி *24* ம் திகதி வழக்கு அழைக்கப்படும் போது அழைப்பாணை அனுப்புமாறும், அரசு தரப்பு சாட்சி இல. *40*க்கு மற்றும் *43*க்கு *2023* ஜனவரி *25* அன்று வழக்கு அழைக்கப்படும் போது அழைப்பாணை அனுப்புமாறும் நீதிமன்றத்திடம் கோரினார். *3*வது மற்றும் *4*வது குற்றவாளிகள் தொடர்பாக, நீதிமன்றம் இந்த நாளில் பிணை வழங்குவதை மறுத்துவிட்டது.[143] திருத்தப்பட்ட *2022* ஆம் ஆண்டின் *12* ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் இது தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், விசேட சூழ்நிலை இருந்தால் ம ாத்திரமே பிணை வழங்கப்பட்டுள்ளது. *3*வது குற்றவாளிக்கு பிணை வழங்க மறுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது, இது தவிர மற்ற வழக்குகளிலும் குற்றம் சாட்டப்பட்டவர், காவல்துறை அதிகாரிகளை கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டவர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது, குற்றம் சாட்டப்பட்டவர் குறிப்பிடப்பட்ட மருத்துவ அறிக்கையின்படி தற்போது ஏதேனும் நோயால் பாதிக்கப்பட்டு, சிறப்பு சூழ்நிலைகள் இல்லாத காரணத்தால் பிணை

வழங்க மறுத்து உத்தரவு பிறப்பக்கப்பட்டது. [144] 4வது குற்றவாளி கேகாலை மேல் நீதிமன்ற வழக்கு இலக்கம். *HC 44/21* இல் குற்றத்தை ஒப்புக்கொண்டதால், உயர் நீதிமன்ற வழக்கு இலக்கம் *HC TAB 2972/21* உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் போது *8* குண்டுகளை புகுத்த சதி செய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளார், மேலும் அவரது மனைவி சிறையில் அடைக்கப்பட்டிருப்பது பிணை வழங்குவதற்கு போதுமான காரணம் இல்லை என்றும், பிணை வழங்குவதற்கு சிறப்புச் சூழல் எதுவும் இல்லை என்றும், *4*வது குற்றவாளிக்கு பிணை வழங்க மறுத்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

*2023* ஆம் ஆண்டு ஜனவரி *26* ஆம் திகதி அரசு தரப்பு சாட்சி இல. *14-38* அழைக்கப்பட்டாலும், சாட்சி இல. *14, 17, 19, 20, 21, 24, 25, 26, 27, 29, 30, 31, 33, 34, 37* மாத்திரமே ஆஜராகியிருந்தனர்.[145] வழக்கறிஞர்கள் பரிந்துரைத்தபடி சட்ட நடவடிக்கைகள் திருத்தப்பட்டன. சில ஒப்புதல்கள் பதிவு செய்யப்பட்டு, அரசு தரப்பு சாட்சி இல. *14* இன் சாட்சி வழங்குதல் முடிவுக்கு வந்தது மற்றும் குறித்த சாட்சியினால் *1*வது மற்றும் *2*வது குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டன. பின்னர், சாட்சி இல. *9, 41, 52, 55* மற்றும் *61* ஆகியோருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது, மற்றவர்கள் விடுவிக்கப்பட்டனர். [146]

*2023* ஜூன் *7* திகதியன்று, மொஹமட் சரேபு ஆதம் லெப்பையின் ஒப்புதல் வாக்குமூலம் தொடர்பாக *Voir Dire* விசாரணை நடத்தப்பட்டது, மேலும் அவர் *1* வது சாட்சியாக சாட்சியமளித்தார், அவ் ஒப்புதல் வாக்குமூலமானது கட்டாயத்தின் பேரில் மற்றும் தான் சித்திரவதைக்கு உற்படுத்தப்பட்டதால் கொடுக்கப்பட்டது என்று மறைமுகமாக தெரியவந்துள்ளது. *Voir Dire* விசாரணை *2023* **செப்டம்பர்** *4, 5, 18* **மற்றும்** *19* ஆகிய திகதிகளில் தொடரும். [147]

## பிரிவு 11: அஹ்னாஃப் ஜெசீமுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கு- HC 148/2021

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கவிஞர் அஹ்னாஃப் ஜெசீம் மீது இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.[148] 2022 நவம்பர் 16 திகதியன்று, 2022 ஆம் ஆண்டின் குற்றவியல் நடைமுறைக்கோவை (திருத்தம்) சட்டத்தின் பிரிவு 195 A (2) இன் படி முன்-விசாரணை ஆரம்பமாகி நிறைவு செய்யப்பட்டது. நீதிபதியின் விசாரணைக்கு பதிலளிக்கையில், அனைத்து சாட்சிகளினதும் வாக்குமூலங்களை பெற்றுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டவர் சார்பில் தெரிவிக்கப்பட்டது [149] குற்றப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு அவர் குற்றவாளியா என்று கேட்டபோது, அவர் குற்றவாளி அல்ல என்று குற்றம் சாட்டப்பட்டவர் சார்பில் தெரிவிக்கப்பட்டது. [150] நிபுணத்துவ சாட்சியளிப்பவர்களின் சாட்சியங்கள் குறித்து நீதிபதி வினவியபோது, எந்தவொரு நிபுணத்துவ சாட்சியையும் முன்வைக்க அவர்கள் உத்தேசிக்கவில்லை என அரசு தரப்பு தெரிவித்துள்ளது. வழக்கை எப்படி நிறுவி நிரூபிக்க விரும்புகிறீர்கள் என்று அரசு தரப்பிடம் நீதிபதி விசாரித்தார். அரசு தலைமையிலான வாய்மொழி ஆதாரங்கள் தொடர்பாக சமர்ப்பிப்புகள் முன்வைக்கப்பட்டன. [151] எந்தவொரு வழக்குப் பொருளையோ அல்லது எந்த ஆவணத்தையோ சமர்ப்பிக்க அறிவுறுத்தப்படவில்லை என்று அரச வழக்கறிஞர் நீதிமன்றத்தில் தெரிவித்தார். வழக்குப் பதிவில் குழந்தை மனநலம் குறித்த பல நிபுணத்துவ அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக நீதிபதியிடம் தெரிவிக்கப்பட்டது. ஆனால் நிபுணத்துவ அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படும் என்று அரச வழக்கறிஞர் நீதிமன்றத்தில் தெரிவிக்கவில்லை. [152] ஒப்புதல்கள் எதுவும் இருக்கின்றதா என நீதிபதி விசாரித்தபோது, ஒப்புதல்கள் எதுவும் இல்லை என குற்றம் சாட்டப்பட்டோர் சார்பில் தெரிவிக்கப்பட்டது. விசாரணையை நடத்துவதற்கு சாட்சிகளை பரீட்சித்தல் உட்பட, சம்பந்தப்பட்ட தரப்பினர் தங்கள் வழக்குகள் தொடர்பான விடயங்களை முன்வைக்க

உத்தேசித்துள்ள தோராயமான காலப் பகுதி குறித்து நீதிபதி வினவியபோது, 14 சாட்சிகளை அழைக்க எதிர்பார்க்கிறோம் என்று அரசு தரப்பு நீதிமன்றத்தில் தெரிவித்தது. [153] மேலும், குற்றம் சாட்டப்பட்டவரால் தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் வழக்கில் சமர்பிக்கப்பட்ட ஆவணங்களை தேவைப்பட்டால் நீதிமன்றத்தில் முன்வைப்பதற்கான உரிமை தங்களுக்கு இருப்பதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டவர் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் நீதிமன்றத்தில் தெரிவித்தார். பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளை விரைவாக விசாரித்து முடிக்குமாறு கௌரவ பிரதம நீதியரசர் உயர் நீதிமன்ற அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளதாக நீதிபதி குறிப்பிட்டார். எனவே, குற்றவியல் நடைமுறைக்கோவை சட்டத்தின் 263வது பிரிவின்படி, விசாரணையைத் தொடங்குவது விரைவில் திட்டமிடப்படலாம். மேலும், நீதிமன்ற நடவடிக்கைகளை தமிழில் மொழிபெயர்த்து குற்றஞ்சாட்டப்பட்டவரிடம் ஒப்படைக்கும் படி நீதிபதி உத்தரவிட்டார்.[154]

2023 பெப்ரவரி 17ம் தினத்ன்று, குற்றப்பத்திரிக்கையின் தமிழ் மொழிபெயர்ப்பு குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு வாசிக்கப்பட்டது மற்றும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் தாங்கள் குற்றமற்றவர்கள் என்று ஒப்புக்கொண்டனர். .[155] வழக்குத்தொடருநரின் சாட்சி இல.2, ஸ்கூல் ஆஃப் எக்ஸலன்ஸின் அதிபர் மற்றும் வழக்குத்தொடருநரின் சாட்சி இல.6, குற்றம் சாட்டப்பட்டவரின் மாணவர் ஆகிய இருவரும் தங்கள் சாட்சியங்களை முடித்துக்கொண்டனர். வழக்குத்தொடருநரின் சாட்சி இல.8ஐ அடுத்த திகதியில் ஆஜராகுமாறு நீதிமன்றம் எச்சரித்தது, மேலும் வழக்குத்தொடருநரின் சாட்சி இல. 9 மற்றும் இல. 10.க்கு அழைப்பானை அனுப்பப்பட்டது.[156] 2023 மார்ச் 23ஆம் திகதி அரச வழக்கறிஞர் ஆஜராகவில்லை.[157] வழக்கு 2023 **ஜூன் மாதம்** 28ஆம் திகதி வரை மேலதிக விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டது.

[1] 'Trial of 25 men accused of Easter Sunday attacks postponed to March 3' (*ColomboPage*, 12 January 2022) <http://www.colombopage.com/archive_22A/Jan12_1641972868CH.php > accessed on 29th of January 2022

**'පස්කු නඩුව මර්තු 3 වනදාට කල්යයි' (*Runews*,**12 January 2022) < https://runews.lk/news/item/27169-the-easter-trial-is-set-for-march-3 > accessed on 30th of January 2022

[2] Sirasa, 'News 1st Prime Time Sinhala News – 7 PM' (23 November 2021) <https://youtu.be/ruDYyKlETCQ?t=1393> (Time duration: 24:50 - 25:45) accessed on 30th November 2021

Ada Derana, 'Ada Derana Prime Time News Bulletin' (23 November 2021) <https://youtu.be/krMXahiVbvg?t=1877 > )Time duration: 31:43 - 31:56) accessed on 1 December 2021

[3] Trial monitoring report on 12th of January, 2022 – Case No: HC (TAB) 2972/21

[4] Trial monitoring report on 12th of January, 2022 – Case No: HC (TAB) 2972/21

'Trial of 25 men accused of Easter Sunday attacks postponed to March 3' (*ColomboPage*, 12 January 2022) <http://www.colombopage.com/archive_22A/Jan12_1641972868CH.php > accessed on 29th of January 2022

**'පස්කු නඩුව මර්තු 3 වනදාට කල්යයි' (*Runews*,** 12 January 2022) < https://runews.lk/news/item/27169-the-easter-trial-is-set-for-march-3 > accessed on 30th of January 2022

[5] Trial monitoring report on 12th of January, 2022 – Case No: HC (TAB) 2972/21

[6] Trial monitoring report on 12th of January, 2022 – Case No: HC (TAB) 2972/21

[7] Trial monitoring report on 12th of January, 2022 – Case No: HC (TAB) 2972/21

[8] Trial monitoring report on 12th of January, 2022 – Case No: HC (TAB) 2972/21

[9] Daily FT, 'Full trial of Easter Sunday terror attack suspects from 12 May' <https://www.ft.lk/news/Full-trial-of-Easter-Sunday-terror-attack-suspects-from-12-May/56-731521> accessed on 12th of December 2022

[10] Daily FT, 'Full trial of Easter Sunday terror attack suspects from 12 May' <https://www.ft.lk/news/Full-trial-of-Easter-Sunday-terror-attack-suspects-from-12-May/56-731521> accessed on 12th of December 2022

[11] Trial monitoring report on 03rd of March 2022 – Case No: HC (TAB) 2972/21

[12] Trial monitoring report on 03rd of March 2022 – Case No: HC (TAB) 2972/21

[13] Daily FT, 'Full trial of Easter Sunday terror attack suspects from 12 May' <https://www.ft.lk/news/Full-trial-of-Easter-Sunday-terror-attack-suspects-from-12-May/56-731521> accessed on 12th of December 2022

[14] Trial monitoring report on 03rd of October 2022 – Case No: HC (TAB) 2972/21

[15] Trial monitoring report on 03rd of October 2022 – Case No: HC (TAB) 2972/21

[16] Trial monitoring report on 03rd of October 2022 – Case No: HC (TAB) 2972/21

[17] Trial monitoring report on 24th of November 2022– Case No: HC (TAB) 2972/21

[18] Trial monitoring report on 24th of November 2022– Case No: HC (TAB) 2972/21

[19] Trial monitoring report on 24th of November 2022– Case No: HC (TAB) 2972/21

[20] Trial monitoring report on 24th of November 2022– Case No: HC (TAB) 2972/21

[21] Trial monitoring report on 04th January 2023– Case No: HC (TAB) 2972/21

[22] Trial monitoring report on 04th January 2023– Case No: HC (TAB) 2972/21

[23] Trial monitoring report on 05th January 2023– Case No: HC (TAB) 2972/21

[24] Trial monitoring report on 01st February 2023– Case No: HC (TAB) 2972/21

[25] Trial monitoring report on 28th February 2023– Case No: HC (TAB) 2972/21

[26] Trial monitoring report on 31st March 2023– Case No: HC (TAB) 2972/21

[27] Trial monitoring report on 24th May and 02nd June 2023– Case No: HC (TAB) 2972/21

[28] Trial monitoring report on 02nd June 2023– Case No: HC (TAB) 2972/21

[29] Sirasa, 'News 1st Prime Time Sinhala News – 10PM (18/01/2022) රාත්‍රී 10.00 ප්‍රධාන ප්‍රවෘත්ති' (18 January 2022) < https://www.youtube.com/watch?v=GOAEcru6gI0&t=1164s > accessed on 25th of January 2022 (Time duration 18:57 - 20:56)

[30] Hiru, 'හිරු රාත්‍රී 6.55 ප්‍රධාන ප්‍රවෘත්ති ප්‍රකාශය - Hiru TV NEWS 6.55 PM Live 2022-01-18' (18 January 2022) <**https://youtu.be/xM5frwcgK9E?t=2329>** accessed on 25th of January 2022 (Time duration 34:09 - 34:54)

[31] Sirasa, 'News 1st Prime Time Sinhala News – 10PM (18/01/2022) රාත්‍රී 10.00 ප්‍රධාන ප්‍රවෘත්ති' (18 January 2022) < https://www.youtube.com/watch?v=GOAEcru6gI0&t=1164s > accessed on 25th of January 2022 (Time duration 18:57 - 20:56)

Hiru, 'හිරු රාත්‍රී 6.55 ප්‍රධාන ප්‍රවෘත්ති ප්‍රකාශය - Hiru TV NEWS 6.55 PM Live 2022-01-18' (18 January 2022) <**https://youtu.be/xM5frwcgK9E?t=2329>** accessed on 25th of January 2022 (Time duration 34:09 - 34:54)

[32] Sirasa, 'News 1st Prime Time Sinhala News – 10PM (18/01/2022) රාත්‍රී 10.00 ප්‍රධාන ප්‍රවෘත්ති' (18 January 2022) < https://www.youtube.com/watch?v=GOAEcru6gI0&t=1164s > accessed on 25th of January 2022 (Time duration 18:57 - 20:56)

[33] Sirasa, 'News 1st Prime Time Sinhala News – 10PM (18/01/2022) රාත්‍රී 10.00 ප්‍රධාන ප්‍රවෘත්ති' (18 January 2022) < https://www.youtube.com/watch?v=GOAEcru6gI0&t=1164s > accessed on 25th of January 2022 (Time duration 18:57 - 20:56)

[34] Sirasa, 'News 1st Prime Time Sinhala News – 10PM (18/01/2022) රාත්‍රී 10.00 ප්‍රධාන ප්‍රවෘත්ති' (18 January 2022) < https://www.youtube.com/watch?v=GOAEcru6gI0&t=1164s > accessed on 25th of January 2022 (Time duration 18:57 - 20:56)

Zulfick Farzan, 'Joint effort could have prevented Easter Attacks – Deshabandu' (*News 1st*, 18 January 2022) <https://www.newsfirst.lk/2022/01/18/joint-effort-could-have-prevented-easter-attacks-deshabandu/ > accessed on 31st of January 2022

[35] Chamath, 'Ex IGP made prior warning to four top Police officers.-Senior DIG | Sri Lanka News' (,18 January 2022) < https://thesinhalanews.lk/2022/01/18/ex-igp-made-prior-warning-to-four-top-police-officers-senior-dig-sri-lanka-news/ > accessed on 31st of January 2022

Trial monitoring report on 18th of January, 2022 – Case No: HC (TAB) 2900/21

[36] Trial monitoring report on 18th of January, 2022 – Case No: HC (TAB) 2900/21

[37] Trial monitoring report on 18th of January, 2022 – Case No: HC (TAB) 2900/21

[38] Trial monitoring report on 18th of January, 2022 – Case No: HC (TAB) 2900/21

[39] Trial monitoring report on 18th of January, 2022 – Case No: HC (TAB) 2900/21

[40] Chamath, 'Ex IGP made prior warning to four top Police officers.-Senior DIG | Sri Lanka News' (,18 January 2022) < https://thesinhalanews.lk/2022/01/18/ex-igp-made-prior-warning-to-four-top-police-officers-senior-dig-sri-lanka-news/ > accessed on 31st of January 2022

Trial monitoring report on 18th of January, 2022 – Case No: HC (TAB) 2900/21

[41] Trial monitoring report on 18th of January, 2022 – Case No: HC (TAB) 2900/21

[42] Derana 'අද දෙරණ රාත්‍රී 10.00 පුවත් විකාශය - 2022.01.19 | Ada Derana Late Night News Bulletin' (19 January 2022) < https://youtu.be/o0n6qqC3Juk?t=667 > accessed on 26th of January 2022 (Time duration 11.06 – 15:24)

'පාස්කු ප්‍රහාරය නඩුවේ ලේඛන 6ක් ගැන ප්‍රකාශයක්' (*Runews*,19 January 2022) < https://www.runews.lk/news/item/27319-statement-on-6-documents-in-the-easter-attack-case > accessed on 30th of January 2022

'පූජිත්ට එරෙහිව ගෙනා ලේඛන පූජිත්ගේ පිහිටට' (*අයිතිය*, 20 January 2022) <https://www.aithiya.lk/12852/pujith-jayasundara-presidential-commission-of-inquiry-pasku-attack/ > accessed on 30th of January 2022

[43] Derana ‘ අද දෙරණ රාත්‍රී 10.00 පුවත් විකාශය - 2022.01.19 | Ada Derana Late Night News Bulletin’ (19 January 2022) < https://youtu.be/o0n6qqC3Juk?t=667 > accessed on 26th of January 2022 (Time duration 11.06 – 15:24)

Hiru, ‘හිරු රාත්‍රී 6.55 ප්‍රධාන ප්‍රවෘත්ති ප්‍රකාශය - Hiru TV NEWS 6:55 PM Live | 2022-01-19’ < https://youtu.be/PW2YBQP2fFc?t=1470 > accessed on 26th of January 2022 (Time duration: 24:31 – 27:32)

[44] Derana ‘ අද දෙරණ රාත්‍රී 10.00 පුවත් විකාශය - 2022.01.19 | Ada Derana Late Night News Bulletin’ (19 January 2022) < https://youtu.be/o0n6qqC3Juk?t=667 > accessed on 26th of January 2022 (Time duration 11.06 – 15:24)

Hiru, ‘හිරු රාත්‍රී 6.55 ප්‍රධාන ප්‍රවෘත්ති ප්‍රකාශය - Hiru TV NEWS 6:55 PM Live | 2022-01-19’ < https://youtu.be/PW2YBQP2fFc?t=1470 > accessed on 26th of January 2022 (Time duration: 24:31 – 27:32)

[45] Derana ‘ අද දෙරණ රාත්‍රී 10.00 පුවත් විකාශය - 2022.01.19 | Ada Derana Late Night News Bulletin’ (19 January 2022) < https://youtu.be/o0n6qqC3Juk?t=667 > accessed on 26th of January 2022 (Time duration 11.06 – 15:24)

Hiru, ‘හිරු රාත්‍රී 6.55 ප්‍රධාන ප්‍රවෘත්ති ප්‍රකාශය - Hiru TV NEWS 6:55 PM Live | 2022-01-19’ < https://youtu.be/PW2YBQP2fFc?t=1470 > accessed on 26th of January 2022 (Time duration: 24:31 – 27:32)

[46] Derana ‘ අද දෙරණ රාත්‍රී 10.00 පුවත් විකාශය - 2022.01.19 | Ada Derana Late Night News Bulletin’ (19 January 2022) < https://youtu.be/o0n6qqC3Juk?t=667 > accessed on 26th of January 2022 (Time duration 11.06 – 15:24)

